# ஈழநாடு

Eelanadu




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 07.04.2021 புதன்கிழமை | இதழ் : 128 | பக்கங்கள் : 16

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனு!

## பிரதிவாதிகளாக மைத்திரிபால, ரணில்

கொழும்பு, ஏப்ரல் 07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்திருந்தபோதிலும் அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தங்களுக்கு ஏற்பட்ட உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புகளுக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறு கோரி தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 27 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

15



**05**

அரசியல்வாதியாக மாறுகிறார் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை!



**06**

ஏப்ரல் முதல் 1,000 ரூபா!



**07**

இலங்கையின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தி நான்!



**12**

உள்விவகாரத்தில் தலையிடாதீர்கள் அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை!

## காடழிப்புக்கு எதிராக ஐ.நாவின் தலையீட்டை கோருகிறது ஐ.தே.க.



கொழும்பு, ஏப். 07

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கு முன்பாக, ஐக்கிய தேசியக் கட்சி, நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்

15

## கொரோனாவால் இருவர் மரணம் இதுவரையில் 588 பேர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப். 07

புதுக்குடியிருப்பு பிரதேசத் துக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து, துப்பாக்கியொன்றும் ரவைகளும் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்யும்போது, நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், வெடிபொருட்கள்

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் 21 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப்.07

யாழ்ப்பாணத்தில் மேலும் 21 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களில் 8 பேர் யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் தடுத்துவைக்

15

## ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் நௌபர் மௌலவி, ஹஜ்ஜுல் அக்பர்



### சரத் வீரசேகர அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஏப்.07

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் - 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி பயங்கரவாதி சஹ்ரான் அல்லன், கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலிலுள்ள நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோ

15

## துப்பாக்கி, ரவைகள் தேவிபுரத்தில் மீட்பு



கொழும்பு, ஏப்.07

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்தனர். இதன் மூலம், கொரோனா தொற்றால் உயிரிழந்

15

## தமிழகத் தேர்தலில் 71.79% வாக்கு பதிவு

சென்னை, ஏப். 07

தமிழக சட்டசபைத் தேர்தலில் 71.79 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

15



## யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பாரவூர்தி கெக்கிராவவில் விபத்து

கொழும்பு, ஏப். 07

கெக்கிராவ 110ஆவது மைல் கல்லிற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பாரவூர்திகள் சேதமடைந்தன. சாரதியொருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலிருந்த தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறிகளை ஏற்றிச்சென்ற பாரவூர்தியும், மரடங்கடவலவிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற மற்றொரு பாரவூர்தியும்

15

## வவுனியாவில் குடும்ப விவரம் திரட்டும் பணியில் பொலிஸார்

### காரணம் தெரியாது அச்சத்தில் மக்கள்

வவுனியா, ஏப். 07

வவுனியா பூந்தோட்டம் பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்ற பொலிஸார் அங்கு தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை திரட்டும் படிவம் ஒன்றை வழங்கிவிட்டுச் சென்றதுடன் இரு தினங்களில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருவதாகவும் குடும்ப விவரங்களில் உள்ளடக்கப்பட்ட விவரங்களை வழங்குமாறும் கூறியுள்ளனர் .

எவ்விதமாக தெளிவுபடுத்தும் அறி

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் மேலும்...

கப்பட்டுள்ளவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் என இரண்டிலும் 702 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 21 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 8 பேருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

பருத்தித்துறை வைத்தியசாலை நோயாளர் விடுதியில் மூன்று பேருக்கும், வைத்தியசாலை உத்தியோகத்தர் ஒருவருக்கும் என நால்வருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் ஏற்கனவே சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற மூவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரில் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 460 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவற்றின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

## கொரோனாவால்...

இனம் காணப்பட்டன.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், உரப்பை ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில், ரி-56 ரக துப்பாக்கி ஒன்றையும் 420 ரவைகளையும் மீட்கப்பட்டுள்ளனர்.

## தமிழகத்...

234 சட்டசபைத் தொகுதிகளிலும் சின்னச் சின்ன சம்பவங்கள் தவிர மிகவும் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ளதாகவும் சத்ய பிரதா சாகு கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 234 தொகுதிகளுக்கும் நேற்று வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடைபெற்றது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வெயில் காலம் என்பதால் வாக்குச்சாவடிகளில் காலை 6 மணிக்கெல்லாம் வாக்களிக்கும் ஆர்வத்தில் வாக்காளர்கள் குவியத்தொடங்கினர். பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குச்சாவடிகளில் சிசிரிவி கமரா அமைக்கப்பட்டிருந்தது.

காலை தொடங்கி மாலை வரை விறுவிறுப்பாக வாக்குப்பதி நடைபெற்றது. மாலை 6 மணிக்கு மேல் 7 மணி வரை கொரோனா நோயாளிகளுக்காக பிரத்தியேகமாக நேரம் ஒதுக்கப்பட்டு இருந்தது. 7 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்தது.

வாக்குப்பதிவு முடிந்ததும் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களும் கட்சி ஏஜெண்டுகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன. அதன்பிறகு பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவைகள் அறைகளில் பாதுகாப்பாக வைத்து சீல் வைக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளில் 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு, தமிழக சட்டசபை தேர்தலில் தோராயமாக 71.79 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், தமிழகத்தில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் 7 மணிக்கு தேர்தல் நிறைவடைந்தது-என்றார்.

## ஈஸ்டர் தாக்குதலின்...

ராவர்.

இவ்விருவரை காட்டிலும் மேலான சூத்திரதாரி எவரும் இல்லை என்பது தற்போது வரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சாரா புலஸ்தினி உயிருடன் உள்ளாரா? அல்லது. இறந்து விட்டாரா? என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிருடன் இருந்தால் அவரைக் கைது செய்வது சாதாரண விடயமல்ல எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை பரிசீலனை செய்த அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-எ)

## வவுனியாவில்...

வுறுத்தல்கள் மற்றும் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் இவ்வாறு குடும்ப விவரங்களை கோருவதால் பொதுமக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை அப்பகுதி தோன்றியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிய வருகையில்-

நேற்று முன்தினம் முதல் பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களிடம் சென்ற பொலிஸார் வீடுகளில் வசிப்பவர்களின் பெயர், முகவரி, தொழில், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம் போன்ற முக்கிய தகவல்களை கோரிய விண்ணப்பப்படிவம் ஒன்றை வழங்கி வருவதுடன் அவ்விவரங்களை சேகரிப்பதற்கு மீண்டும் வருகை தரவுள்ளதாகவும், அப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை நிரப்பி கையளிக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர் .

இவ்வாறு பொலிஸாரினால் குடும்ப விவரங்கள் சேகரிப்பதற்கு காரணங்கள் தெரியாமல் மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

## காடழிப்புக்கு...

பாட்டத்தை முன்னெடுத்தது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் காடழிப்புக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், தலைமையகத்திலிருந்த அதிகாரியிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றிருந்தனர். அத்துடன், கட்சியின் பெண்கள் பிரிவினரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புள்ளோரை ஏப்ரல் 21 இற்கு முன்னர் தண்டிக்கமுடியாது

## அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 07

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு, எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தண்டனை வழங்கப்படும் எனக் கூற முடியாது என, அரசாங்கத்தின் முக்கியஸ்தரான பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தாக்குதல், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றது. 2 வருடங்களாகப் போகின்றது. தெரிவுக்குழு அமைக்கப்பட்டு பல விசாரணை நடத்தப்பட்டன.

ஷானி அபேசேகர உட்பட அதிகாரிகளின் அறிக்கைகளிலும், சூத்திரதாரி யார் என்பதை கண்டுபிடிக்க முடியாமற்போனது. இது மதமொன்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட தாக்குதலாகும்.

அடுத்தது, முன்னாள் ஜனாதிபதியும் ஆணைக்குழு ஒன்றை அமைத்தார். ஆணைக்குழுவின் அறிக்கை இன்று (நேற்று) கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரான நடவடிக்கைக்கு, அறிக்கை சட்டமா அதிபரிடம் ஆட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அரசாங்கத்தின் நடவடிக்கைக்காக, மற்றுமொரு துணைக் குழு அமைக்கப்பட்டு, பின் அறிக்கையும் கையளிக்கப்பட்டது. இது செயற்பாடாகும். இதன் காலக்கெடு என எதுவும் கூற முடியாது. ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர், அனைத்தும் முடிவடையும் என்றும் என்னால் கூற முடியாது.

வழக்கு தாக்கல் செய்வதாயின், சட்டமா அதிபர், வழக்கு தொடர்வதற்கான போதுமான ஆதாரங்கள் இருக்கின்றனவா என்ற தீர்மானத்திற்கு வர வேண்டும். சம்பந்தப்பட்ட பிரிவுகள் செயற்படுகின்றன.

அரசாங்கம், பொலிஸார் ஊடாக விசாரணை செய்து தகவல்கள் திரட்டப்பட்டு, அவை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அந்த செயற்பாடு பூரணமாகியுள்ளது.

இந்த நிலையில், இறுதி நடவடிக்கை எப்போது, காலக்கெடு என்ன, யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்பதை என்னால் கூற முடியாது.

அவசியமான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இதுகுறித்த தகவல்கள் அனைத்தும், சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. வழக்கு தாக்கல் செய்ய எம்மால் முடியாது.

தகவல்களுக்கு அமைய, சட்டமா அதிபர் திருப்தி கொண்டால்தான், அடுத்த கட்ட நடவடிக்கை அவர் ஊடாக எடுக்கப்படும். அது எமது பணியல்ல. அரசாங்கம் வழக்கு தாக்கல் செய்யாது. அரச பணியும் அல்ல. எமக்குத் தெரியாத விடயங்களை பேச முடியாது. நபர்களை குற்றவாளிகளாக்கவும், நிரபராதிகளை குற்றவாளிகளாக்கவும் அரசியல்வாதிகளுக்கு முடியாது-என்றார்.

# ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் ஆங்கில இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், ஏப். 07

க. பொ. த. உயர்தரத்தில் ஆங்கில இலக்கியத்தை (பாட இலக்கம் 73) பிரதான பாடங்களில் ஒன்றாக பயிலும் வடக்கு மாகாண மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையினர் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை - 10 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 2021, 2022, 2023 ஆம் வருடங்களில் இடம்பெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள், தற்போது தரம் 10, தரம் 11 இல் கல்வி பயிலும் - உயர்தரத்தில் ஆங்கில இலக்கியத்தை தமது பிரதான பாடங்களில் ஒன்றாக தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது இந்தப் பாடம் தொடர்பில் அறிந்து கொள்ள விரும்பும் மாணவர்கள். உயர்தர வகுப்பு ஆங்கில பாடத்தில் ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்க முடியும்.

இதன்போது, தரம் 12, 13 இல் ஆங்கில இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கு எவ்வாறான வழிகளில் யாழ். பல்கலைக் கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையினர் உதவி வருகின்றனர் என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்படும். அத்துடன் இந்த உதவியை எவ்வாறு மேம்படுத்தலாம் - விரிவுபடுத்தலாம் என்பது தொடர்பிலும் ஆராயப்படும்.

மேலும், இந்தக் கருத்தரங்கில் ஆங்கிலத்துக்கான பிரதி கல்விப் பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் வளவாளர்களாக செயல்படுவர்.

இந்நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் சுகாதார விதிகளை கடைப்பிடித்தும், சமூக இடைவெளியை பின்பற்றியும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பாக்கி...

தோரின் எண்ணிக்கை 588 ஆக அதிகரித்துள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிபில பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது ஆணொருவரும் அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 93 ஆயிரத்தை கடந்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிவரை 95 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 690 ஆக உயர்வடைந்தது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 90 ஆயிரத்து 708 பேர் குணமடைந்ததோடு, 2301 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-எ)

## யாழ்ப்பாணத்தில்...

மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதில் சாவகச்சேரியிலிருந்து சென்ற பாரவூர்தி கடுமையான சேதமடைந்தது.

## ஈஸ்டர் தாக்குதலில்...

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்திருந்த போதிலும் அவர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்ற தவறியதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

சில்லையூர் செல்வராசன் என்ற கலைஞனை தெரியாதவர்கள் இருக்கமுடியாது. 'பல்கலை வேந்தன்' என்று பாராட்டுப் பெற்ற அவர், தான்தோன்றிக் கவிராயர் என்ற பெயரில் எழுதிக் குவித்த கவிதைகள் ஏராளம். இயேசுவின் உண்மையான சீடன் யூதாஸ்தான் என்று அவர் ஒரு காவியம் எழுதியது ஞாபகம்.

யூதாஸ் நாற்பது வெள்ளி பணத்திற்காகவே இயேசுவைக் காட்டிக்கொடுத்தார் என்பது அனைவருக்கும் தெரிந்தது. ஆனால், சில்லையூரான் அதனை வித்தியாசமாகப் பார்த்தார். இயேசுவின் சீடர்களிலேயே யூதாஸ் ஒருவனே இயேசு அற்புதங்கள் செய்தபோதெல்லாம் எந்த ஆச்சரியமோ கேள்வியோ இல்லாமல் ஏற்றுக்கொண்டவர். அதாவது இயேசு அற்புதங்கள் செய்கிறார் என்பதை சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டவர். இயேசுவைக் காட்டிக்கொடுக்குமாறு காசு கொடுத்த போது, இவர்களுக்கு தான் காட்டிக் கொடுத்தாலும் இயேசுவை இவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று அவன் பூரணமாக நம்பியதாலேயே அதனைச் செய்தான். சில்லையூரானின் வாதம் இப்படி இருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர், மூத்த போராளி சிவாஜிலிங்கம் மீது இந்த ஊர்க்குருவிக்கு தனி மரியாதை உண்டு. அவர் எதைச் செய்தாலும் தான் செய்கின்ற விடயத்தை இதயசுத்தியுடன் நம்பிக்கொண்டே செய்பவர். ஹிலாரி கிளின்ரன் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக அவர் நல்லூர் ஆலயத்தில் ஆயிரம் தேங்காய்களை உடைத்தபோது சமூகவலைத்தளங்களில் பலரும் கேலி செய்தனர்.

ஆனால், அவர் அதனையும் ஒரு நம்பிக்கையோடே செய்தார். அவரது விருப்பமெல்லாம் ஹிலாரி வெல்ல வேண்டும் என்பதே. அதாவது, அவர் வென்றால் இவருக்கு தனிப்பட்ட முறையில் எதுவும் கிடைக்கப் போவதில்லை. ஆனால், அவர் நம்பியது, அவர் வெற்றிபெற்றால் அதன் மூலம் ஈழத் தமிழ் மக்களுக்கு சில நன்மைகள் கிடைக்கும் என்ற அவரது நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை சிறுபிள்ளைத்தனமானது என்று சிலர் வாதிட்டாலும், அவரைப் பொறுத்தவரை அவர் அதனை நம்பிக்கொண்டே செய்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தான் நம்புகின்ற ஒரு தெய்வத்தின் வாயிலில் அப்படி தேய்காய் அடித்து வழிபட்டால் அவர் வெற்றிபெறுவார் என்பதும் அவரது நம்பிக்கை தான்.

இலங்கையில் நடந்து முடிந்தது இனப்படு கொலைதான் என்றாலும் அதனை நீதிமன்ற பொறிமுறை ஒன்றினூடாக நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் நம்மிடம் இல்லை என்று சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பாக சிவாஜிலிங்கம் பொங்கி எழுந்ததைக் காணமுடிந்தது.

சுமந்திரன் ஒதுங்கினால் அடுத்த செப்ரெம்பருக்குள் தான் விசாரணை நடத்தி இனப்படு கொலை என்பதை நிரூபித்தக் காட்டுகின்றேன் என்றும் சவால் விடுத்தார் சிவாஜி.

வடக்கு மாகாண சபையில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இனப்படுகொலை என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் அதைவிட வேறு என்ன ஆதாரம் தேவையிருக்கிறது என்று அவர் கூடவே கேள்வி எழுப்பியதையும் கவனித்திருப்பீர்கள். அவரைப் பொறுத்தவரை அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்றபோது அப்படியொரு நம்பிக்கையுடன்தான் அதனைச் செய்தார் என்பது தெரிந்ததுதான். ஆனால், அந்தத் தீர்மானம் ஒன்றுமட்டும் போதுமானதா என்பதை அவரது தலைவரும் முன்னாள் நீதியரசருமான விக்னேஸ்வரன், மற்றும் மூத்த சட்டத்தரணியும் அவரது கட்சித் தலைவருமான சிறிகாந்தா போன்றவர்களிடமே அவர் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

எத்தனை வழக்குகளில் உண்மையான குற்றவாளி அவன்தான் என்று தெரிந்துகொண்டும், குற்றங்களை நிரூபிக்க முடியாததால் நீதியரசர் அவனை விடுதலை செய்திருப்பார் என்பதையும் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நிரூபிக்க முடியும் எனில் சுமந்திரனின் எம்.பி. பதவி ஒன்றும் உங்களுக்கு தடையாக இருக்கப் போவதில்லை. செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் அதற்கான முயற்சியை செய்து முடிக்கவேண்டும்.!

- ஊர்க்குருவி.

# ஊர்காவற்றுறை மருத்துவமனை அருகே மதுபானசாலை நிரந்தரமாக வேண்டாம்!

## வைத்திய அத்தியட்சகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 07

**ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலைக்கு அண்மையாக மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கோரி பிரதேச செயலருக்கு கோரிக்கை கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரால் அனுப்பி வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கைக் கடிதத்தில்,

"சுருவில் பிரதான வீதியில், வைத்தியசாலைக்கு அண்மையாக மதுபானசாலை அமைக்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வைத்திய அத்தியகட்சகரும் பொது அமைப்புகளும் சுட்டிக்காட்டின. இந்த விடயத்தை ஆராய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பகுதியில் மதுபானசாலையை அமைப்பதை நிறுத்துவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்நிலையில், மதுபான சாலை சம்பந்தமாக மீண்டும் ஒரு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே தீர்மானிக்க முடியும்."

மேலும், "ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அனைத்து தீவுகளுக்குமான பிரதான வைத்தியசாலையாகக் காணப்படுகின்றது. அன்றாடம் அதிகளவான நோயாளர்கள், பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் வருகை தரும் நிலையில் வைத்தியசாலைக்கு அண்மையாக மதுபானசாலையை அமைப்பது மதுபாவனையாளர்களால் வைத்தியசாலை செயல்பாடுகளுக்கும் நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறுகள் ஏற்படக்கூடிய நிலைமையையும் பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்தும். அத்துடன், சமூக ரீதியாக மதுபாவனையாளர்களை அதிகளவில் உருவாக்கக்கூடிய இக்கட்டான நிலைமையையும் வலிந்து உருவாக்கும்.

"மேலும், ஊர்காவற்றுறையில் மதுபானசாலை அமைப்பதால் மதுப்பாவனை அதிகரிப்பதுடன், வீதி விபத்துக்கள், கைகலப்புக்கள் மற்றும் பால்நிலை வன்முறைகள் அதிகரிக்கும் அபாய நிலையும் ஏற்படும். இதனால், நோயாளர்கள், பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படும். எனவே இதனைக் கருத்தில் கொண்டு, மதுபானசாலையை அமைப்பதற்கான அனுமதியை வழங்காதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை கடிதத்தின் பிரதிகள், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர், கடற்றொழில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)



# பிரிட்டன் தூதுவருடன் 'ரெலோ' நேற்று பேச்சு

## ஜெனிவா உட்பட பல விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, ஏப்.07

ரெலோ அமைப்பின் முக்கியஸ்தர்கள் பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவர் சாரா ஹமில்டன் அவர்களுடன் உத்தியோக பூர்வமான சந்திப்பினை நேற்று மேற்கொண்டனர்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் இச்சந்திப்பில் ரெலொ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கருணாகரம் மற்றும் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் கலந்து கொண்டனர்.

ஐ நா விடயங்கள், அரசியல் தீர்வு, மாகாணசபை தேர்தல்கள், நில அபகரிப்பு, இளையோர் மற்றும் பெண்கள் பங் களிப்பு, அபிவிருத்தி ஆகிய பல்வேறு விடயங்கள் சம்பந்த மாக நடந்த பேச்சுக்கள் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தது. (3)

# எதிர்க்கட்சி தலைவரின் தலையீடே ரஞ்சன் சிறையில் இருக்க காரணம்!

## சபையில் கூறினார் மஹிந்தானந்த

கொழும்பு, ஏப்.07

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது வழக்கில் தலையிடுவதே தான் சிறையில் இருக்கக் காரணம் என நீதிமன்றத்தில் தன்னை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்ததாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதனை பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் ரஞ்சன் ராமநாயக்கவின் அறிக்கையை உறுதிப்படுத்தும் கடிதத்தை கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது ரஞ்சன் ராமநாயக்க தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் விவாதம் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் குறித்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும், ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான வழக்கின் போது அவருக்கு உதவி புரியாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அவரது ஆசனம் தொடர்பாகப் போராடுகிறார்கள் என்றும் அமைச்சர் மஹிந்தானந்த குறிப்பிட்டார். (எ)

# அரசாங்கம் கடன் வரம்பை ஒருபோதும் மீறவில்லை!

## அஜித் நிவாட் கப்ரால் சொல்கிறார்

கொழும்பு, ஏப்.07

2020ஆம் ஆண்டில் அரசாங்கம் கடன் வரம்பை ஒருபோதும் மீறவில்லை என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அரசமைப்பு மற்றும் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயல்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து அஜித் நிவாட் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அரசமைப்பின் படியே செயல்பட்டார் எனவும், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் காணப்படுகின்ற நிலையில், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் இராஜாங்க அமைச்சர் எதிர்க்கட்சியை கேட்டுக்கொண்டார். (எ)




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.04.2021 புதன்கிழமை
சார்வரி, பங்குனி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மீண்டும் சுமந்திரன் தொடர்பான சர்ச்சைகள்

இனப்படுகொலை தொடர்பில் சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தொடர்பில், மீண்டும் சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பில் இடம்பெற்ற சமகால அரசியல் தொடர்பான நிகழ்வொன்றிலேயே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இனப்படுகொலை தொடர்பில் நாங்கள் வலியுறுத்தினாலும்கூட, அதனை நீதிமன்ற பொறிமுறையின் ஊடாக நிரூபிப்பதற்கான போதிய ஆதாரங்கள் இல்லையென்றே சர்வதேச நிபுணர்கள் கருதுகின்றனர் என்றவாறு சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் மீளவும் தமிழ் அரசியல் சூழலில் சர்ச்சைகளை தோற்றுவித்திருக்கின்றன. அதே வேளை, வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இனப்படுகொலை என்று குறிப்பிடப்படவில்லை. அதற்கு பதிலாக, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தின்கீழ் ஓர் இனப்படுகொலையாக இன்னும் ஏற்றுக்கொள்ளப்பட்டவில்லை. வழமைபோல் சுமந்திரனை எதிர்த்து சிலர் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர். இது ஒரு தேவையற்ற சர்ச்சை. சுமந்திரன் இதற்கு முன்னரும் இதேபோன்ற கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்.

உண்மையில், இனப்படுகொலை விவகாரம் அதிகம் தேர்தல் அரசியலுக்கு பயன்படுத்தப்படுகின்றதேயன்றி, அதற்கு மேல் சரியானதொரு புரிதலின் அடிப்படையில் முன்வைக்கப்படும் வாதமாகத் தெரியவில்லை. இதன் காரணமாகவே 'இனப்படுகொலை' என்னும் சொல் தேவையற்ற சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது. ஓர் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை தமிழர் தரப்புக்கள் ஆணித்தரமாக நம்பினால், அதில் உறுதியாக இருந்தால், அதனை நிரூபிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கவேண்டும். அதற்கான ஆதாரங்களை சர்வதேச சமூகத்தின் முன்னால் வைத்திருக்கவேண்டும். யுத்தம் நிறைவுற்று பன்னிரண்டு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட, சுமந்திரனை முன்வைத்து இனப்படுகொலை விவகாரத்தை விவாதிக்க முற்படுவது அடிப்படையிலேயே தவறானது. தவறானது என்பதற்கப்பால், அனைத்து தரப்பினரதும் இயலாமைக்கான சான்றாகவும் இது இருக்கின்றது.

உண்மையில் இனப்படுகொலை இடம்பெற்றிருந்தால் அதனை ஒரு சுமந்திரன் என்னும் தனிநபரால் மறைக்கவோ அல்லது திரிபுபடுத்தவோ முடியாது. உலகில் பல நாடுகளில் இனப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றது. அவை, சாட்சியமற்ற போர்களாகக்கூட நோக்கப்பட்டதுண்டு. ஆனால், அங்கு இடம்பெற்ற இனப்படுகொலையை எவராலும் மறக்கவோ அல்லது அதனை மூடிமறைத்துவிடவோ முடியவில்லை. குவாட்டமாலாவில் மாயன் பழங்குடி மக்களுக்கு எதிரான இடம்பெற்ற இனப்படுகொலையில், அந்த நாட்டு அரச படைகள் ஈடுபட்டமையை உலகின் கண்களிருந்து மறைக்க முடியவில்லை. குவாட்டமாலா அரச படைகளுக்கு பயிற்சியளித்த விவகாரத்தில், அமெரிக்க உளவுத்துறையின் மீதுகூட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்த அமெரிக்க நிர்வாகம், உளவுத்துறை அதிகாரிகள் சிலரை பணி நீக்கம் செய்தது. சிலரை கட்டாய ஓய்வில் விலக்கியது. அமெரிக்கா என்பதால் குற்றம் மூடி மறைக்கப்படவில்லை. இதேபோன்று பொஸ்னியா, ருவாண்டா போன்ற பல நாடுகளின் உதாரணம் உண்டு.

உண்மையில் இனப்படுகொலை இடம்பெற்றிருக்குமாக இருப்பின் நிச்சயம் அதிலிருந்து இலங்கை தப்ப முடியாது. இந்த விடயத்தில் சுமந்திரனை அதிகம் முன்னிறுத்தி விவாதிக்க முற்படுவதே இந்தப் பிரச்னையின்மீது மற்றவர்கள் கொண்டிருக்கும் உறுதியான நிலைப்பாடு தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையில், இனப்படுகொலை என்பதே, வெறுமனே, சுமந்திரனுக்கு பதிலளிக்கும் ஒரு விடயமாகவே சுருக்கப்பட்டிருக்கின்றது. இனப்படுகொலை விவகாரத்தில் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் நம்பிக்கை சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது.

# "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்" நில அபகரிப்பு

- அலசுவது இராஜதந்திரி -

அண்மைக்காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல் வேறு இடங்களிலும் நில அளவீடு மற்றும் படைத்தரப்பினருக்கான நில அபகரிப்பு உட்பட, தொல்பொருள் ஆய்வு என்ற ரீதியில் யுத்த பாதிப்புக்களிலிருந்து தம்மை முழுமையாக விடுவித்துக்கொள்ள விரும்பும் மக்களை குழப்பத்திலாழ்த்தும் நடவடிக்கைகள் அதிகரித்திருக்கக்காணப்படுகின்றன.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் படையினரின் பாவனைக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப்பகுதிகளே இதுவரை முழுமையாக கையளிக்கப்படாத நிலையில், வடக்கு-கிழக்கில் மக்களது காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் யுத்த பாதிப்புகளிலிருந்து முழுமையாக மீண்டு தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி அமைதியாக வாழ எண்ணும் மக்களை கவலை கொள்ள வைப்பதாகவே இருக்கின்றது. நில அபகரிப்பு மற்றும் காணி அளவீடு என்ற ரீதியில் அடாவடித்தனங்களும் மேற்கொள்ளப்படுவது, பாதிக்கப்பட்ட மக்களை மேலும் உளரீதியான பாதிப்புக்களுக்குள்ளக்கி விடுவதாகவே இருக்கின்றது.

இத்தகைய மக்கள் மனதைப்புண்படுத்தும் நடவடிக்கைகள் யுத்தம் முடிவுற்ற காலம் முதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிகின்றது. இராணுவத்தினருக்கென காணிகளை எடுப்பது என்ற நடவடிக்கை அர்த்தமற்றதொன்றாகவே இருக்கின்றது. ஏனெனில், யுத்தம் ஆரம்பித்த காகட்டத்தில் இராணுவ முகாம்களின் விஸ்தரிப்பு என்ற வகையில் வடக்கிலிருநது கிழக்குவரை புதிய முகாம்கள் அமைக்கப்பட்டதோடு, தனியார் காணிகளும் அபகரிப்புக்குள்ளாகியிருந்தன.

**அதி உயர் பாதுகாப்பு வலயம்**

அத்துடன், அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற ரீதியிலும் பல மைல்கள் விஸ்தீரணத்தில் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், யுத்தகாலத்தில் படையினரால் காணிகள் கையேற்கப்பட்ட நிலையில் காணி உரிமையாளர்கள் காணிகளை மட்டும் இழக்கவில்லை. தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறும் துர்பாக்கிய நிலைக்குமுள்ளாகி, இடம்பெயர்ந்தோர் என்று அழைக்கப்பட்டவர்களாக முகாம்களிலும் புதிய இடங்களைத் தேடியோராகவும் சென்றிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

இன்று பல இடங்களில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளதோடு, அப்பாதுகாப்பு வலயங்களுக்குள் இருந்த தனியாரின் காணிகள், கட்டிடங்கள் என்பனவும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. ஆயினும், ஒரு முழுமை பெறாத நடவடிக்கையாகவே இக்காணிகள் மீளக் கையளிக்கப்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், யுத்தம் முடிவுற்று தற்போது பத்து வருட காலம் கடந்துள்ள நிலையில், மீளவும் படையினரது தேவைக்காக காணிகளை எடுக்க முயல்வது, பாதிக்கப்பட்ட மக்களிடையே மனக்கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, அநாவசியமான பிரச்னைகளையும் தோற்றுவித்துள்ளது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் நல்லெண்ண நடவடிக்கைகள் தொடர்பாகவே அரசு தனது கவனத்தை திருப்பியிருக்க வேண்டும். ஆனால், காத்திரமான வாழ்வை மீளவும் கட்டியெழுப்ப முயலுகின்ற மக்களை சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதாகவே இது இருக்கின்றது.

**மக்கள் போராட்டம்**

வடக்கே அண்மைக்காலங்களில் பல்வேறு இடங்களில் நில அபகரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், நில அளவையாளர்களையும் விரட்டியிருந்தனர்.


வடக்கே பலதரப்பட்ட மனிதாபிமான பிரச்னைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டியிருக்கின்ற நிலையில், புதிய பிரச்னைகள் முளைத்துவிடாதிருப்பதையே உறுதிசெய்ய வேண்டியதாக இருக்கின்றது.

அவ்வாறில்லாமல், மக்களை சீண்டுவதோடு அவர்களின் அமைதியையும் குலைத்துவிடும் செயல்களிலேயே அரசு தரப்பு ஆர்வம் காட்டி வருகின்றது. காணி அபகரிப்பு நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, தொல்பொருள் ஆய்வு என்ற வகையிலும் அகழ்வாராய்சி திணைக்களத்தைச் சேர்ந்தோர் வடக்கு - கிழக்கின் பல்வேறு இடங்களிலும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வடக்கு - கிழக்கில் அகழ்வாராய்ச்சி விடயத்தில் முனைப்போடு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமதுங்க வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பகுதிகள் பௌத்த தொல்பொருள் அகழ்வாராய்ச்சி பிரதேசங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு பதிலாக, பின்னோக்கி கொண்டு சென்று இனமுறுகலையும் உண்டு பண்ணுவதாக அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் காணப்படுகின்ற நிலையில், காணி அபகரிப்பு மற்றும் அகழ்வாராய்ச்சி என்ற புறம்போக்கான செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வடக்கு - கிழக்கின் தமிழ் தரப்பு அரசியலாளர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் தமது அரசியல் வேறுபாடுகளை களைந்து, ஒரே குரலில் தமது எதிர்ப்பை கடுமையாக வெளியிட வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல் - 7 புதன்கிழமை**
சார்வரி வருடம் - பங்குனி - 25
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

**07.04.2021**

**மேடம்**
தொழில் சிந்தனையும், திறமையும் உள்ளதால் நன்மை காண்பீர்கள். பெண்களுக்கு மகிழ்ச்சி கூடும்படியான நிகழ்வுகள் நடக்கும். நண்பர் ஒருவருக்காக அலைச்சலுக்கு ஆளாக வாய்ப்புண்டு.

**இடபம்**
முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். பரபரப்பு கூடும். உங்களின் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும் படியான திருப்பம் வரும். பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டு பாராட்டு பெறுவர்.

**மிதுனம்**
சமீபத்தில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும் நாள். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்தால் சண்டை வராது. பணப்புழக்கம் முன்பைவிடச்சற்றே மேம்படும். சலிப்பு தீரும்.

**கடகம்**
பணியாளர்களுக்கு நின்றுபோயிருந்த நன்மைகள் தொடரும். பல நாளாக எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி வரும். தந்தைக்கு அலுவலக ரீதியாக நன்மை ஒன்று வரும்.

**சிம்மம்**
உஷ்ணம் சம்பந்தமான சிரமம் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். நின்றுபோயிருந்த சுபப் பேச்சு வார்த்தை திடீரெனத் தொடரும். குழந்தைப்பேறு உறுதியாகும். வாழ்க்கைத்துணைக்கு அதிர்ஷ்டம் வரும்.

**கன்னி**
இளம் வயதினருக்கு புதிதாக காதலில் ஈடுபாடு வரும். கலை சம்பந்தமான புதிய விஷயம் கற்கும் ஆர்வம் வரும். புத்திசாலித்தனமும் கவர்ச்சி அம்சமும் ஒருங்கே அதிகரிக்கும்.

**துலாம்**
பெண்களுக்கு மாதாந்திரத் தொல்லை சரியாகி நிம்மதி வரும். அதிர்ஷ்டம் காரணமாக நன்மை வரும். தந்தைக்கு நற்செய்தி வரும். எதிர்பாலினத்து நட்புகளுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போகும்.

**விருட்சிகம்**
ஒன்றுக்கு மேற்பட்ட லாபங்கள் வரும். பணியிடத்தில் நற்செய்தி உண்டு. திடீரென்று நல்ல வேலை கிடைத்துத் திக்குமுக்காட வைக்கும். பிள்ளைகளால் பெருமிதம் அளிக்கும் நன்மை உண்டாகும்.

**தனுசு**
தாயாருக்கு திடீர் நற்செய்தி வந்து மகிழ்விக்கும். புது விஷயம் கற்பீர்கள். கலை நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பேச்சைக் குறைக்கவும். குடும்பத்தில் நடக்கும் விவாதங்களில் கலந்து கொள்ள வேண்டாம்.

**மகரம்**
உடல், மனதில் ஏற்பட்ட சோர்வு தற்காலிகமானதே. திறமையான பேச்சினால் பிரச்னை ஒன்றைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தில் காணாமல் போயிருந்த கலகலப்பு மீளும்.

**கும்பம்**
தடை, தாமதங்களை எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளுக்கும், கணவருக்கும் நன்மை ஒன்று நடக்கும். ஒதுங்கலாம் என்று நினைத்த விஷயங்கள் உள்ளே இழுக்கும்.

**மீனம்**
திடீர் செலவுகள் வரும். நிதான நன்மைகள் உண்டு. மனதில் தீய எண்ணங்கள் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நண்பர்களுக்கு நன்மை செய்வீர்கள். புதிய விஷயங்களை யோசிப்பீர்கள்.

# தி.மு.க.வுக்கு மக்களிடம் பேராதரவு!

### ஸ்டாலின் முதல்வர் என்ற அறிவிப்பு வரும் - வைகோ



சென்னை, ஏப். 07

**தி.மு.க. கூட்டணிக்கு மக்களின் பேராதரவு கிடைத்துள்ளதாகவும் 200இற்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்றும் என்றும் கூட்டணிக் கட்சியான ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

தென்காசி மாவட்டத்தில் நேற்று தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வாக்குப் பதிவுக்காக ஏழை, தினக்கூலி மக்கள் அதிகமாக வந்துள்ளனர் என்று தெரிவித்துள்ள வைகோ, அவர்கள் தன்னை வரவேற்றதாகவும் தி.மு.க.வுக்கு மக்களிடம் பேராதரவு திரண்டிருப்பதைக் காணமுடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது எனவும் ஜனநாயகத்தின் தீர்ப்பு ஸ்டாலின் முதல்வர் என்பதாகவே அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், தமிழகத்தில் ஐந்து தொகுதிகளில் தேர்தலை இரத்துச் செய்யக் கோரிய அ.தி.மு.க.வினரின் மனு குப்பைத் தொட்டிக்குச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ள வைகோ, இந்த தேர்தலில் அ.தி.மு.க.வினர் படுதோல்வி அடைவார்கள் என்று குறிப்பிட்டார்.

# முதல்வர் பழனிசாமி குடும்பத்துடன் வரிசையில் நின்று வாக்களித்தார்





சென்னை, ஏப். 07

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஒரே கட்டமாக நேற்று நடந்தது. காலையிலேயே தனது வாக்கை தி.மு.க தலைவர் ஸ்டாலின் பதிவு செய்தார். இந்நிலையில் முதல்வர் பழனிசாமி காலை 10.30 மணி அளவில் தனது வீட்டருகில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

வாக்களிக்க செல்ல முன் தனது வீட்டில் வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மற்றும் தனது தாயார் படத்திற்கு மலர் தூவி வணங்கினார். பின்னர் தனது மனைவி, மகன், மருமகள் பேரனுடன் வீட்டிலிருந்து நடந்தே சிலுவம்பாளையம் அரசு தொடக்கப் பள்ளிக்குச் சென்றார். வரிசையில் சென்று நின்றார். அவருக்கு முன் சில பெண்கள் வாக்களிக்க வரிசையில் நின்றிருந்தனர். அவர்கள் வாக்களித்தபின் தனது வாக்காளர் அடையாள அட்டையைக் காண்பித்து முதல்வர் வாக்களித்தார்.

அவர் வாக்களிக்க தனிப்பகுதிக்குச் செல்லும் போது தனது பேரனையும் உடன் அழைத்துச் சென்று வாக்களித்தார். வாக்களித்தபின் தனது பேரனைத் தூக்கிக் கொண்டு பத்திரிகையாளர்களுக்கு போஸ் கொடுத்தார்.

# மீண்டும் அம்மாவின் அரசு!

### ஜெயக்குமார் தெரிவிப்பு

சென்னை, ஏப். 07

தமிழகம் முழுவதும் மக்கள் எழுச்சியோடு வாக்களிப்பதை பார்க்கும்போது மீண்டும் அம்மாவின் அரசு அமையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய ஜனநாயக கடமையை ஆற்றியப்பின் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “பணத்தை வைத்து ஜனநாயகத்தை மிதிக்கும் வகையில் குறித்த 5 தொகுதிகளிலும் பணப்புழக்கம் அதிகமாக இருப்பதால் அந்த ஐந்து தொகுதிகளிலும் தேர்தலை இரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தோம். இது குறித்த இறுதி முடிவை தேர்தல் ஆணையகமே எடுக்கும்.

அம்மாவின் திட்டங்கள் மக்களிடம் சென்றடைந்துள்ளன. அதற்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் அம்மாவின் அரசாங்கம் மீண்டும் அமையும் என்ற வகையில் தான் மக்களின் எழுச்சி இருக்கிறது. ஆகவே அம்மாவின் ஆட்சி அமையும் என நம்புகிறோம்” எனத் தெரிவித்துள்ளார்.



# சைக்கிளில் சென்று வாக்களித்த விஜய்

சென்னை, ஏப். 07

நடிகர் விஜய் சென்னை நீலாங்கரையில் இருக்கும் வேல்ஸ் இன்டர்நஷனல் பாடசாலையில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு சைக்கிளில் சென்று வாக்களித்தார்.

பெற்றோல், டீசல் விலை உயர்வை மறைமுகமாக சுட்டிக்காட்ட விஜய் இவ்வாறு சைக்கிளில் சென்றார் என சமூக ஊடகங்களில் சிலர் பதிவிட்டனர்.

வீடு திரும்பும்போது அவர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் திரும்பிச் சென்றார். அதிக இரசிகர்கள் கூடியதாலேயே அவர் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பினார் எனக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு வலி.தெற்கில் உலர் உணவுப்பொதி

யாழ்ப்பாணம், ஏப். 07

வலி தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்களிப்பில் அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்திடம் வேண்டுகோள் விடுத்ததன் பயனாக குறித்த பொதிகள் வழங்கப்பட்டன.

ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 30 குடும்பங்களுக்கே உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வலி தெற்கு தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன் சுவாமிகள், கிராம சேவகர் அகிலன், பொதுச்சுகாதர பரிசோதகர் ஆகியோர் மக்களிடம் உதவிப்பொருட்களை கையளித்தனர்.

# இலங்கையில் நீடிக்கும் வெப்பமான காலநிலை

## 8 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 07

நாட்டின் சில பகுதிகளில் நேற்று முதல் அதிக வெப்பமான காலநிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த காலநிலை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில், சூரியன் பூமிக்கு நேராக உச்சம் கொடுப்பதே இந்த கடும் வெப்பமான காலநிலைக்கு காரணமாகும்.

எனினும் இது தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல், அனுராதபுரம், பொலனறுவை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்பமான காலநிலை நிலவக்கூடுமென அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிக வெப்பத்தினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை பொதுமக்கள் எடுக்கவேண்டும் என திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, தேவைக்கேற்றளவு நீர் அருந்துதல், முடிந்தவரை நிழல் தரக்கூடிய இடங்களில் இருத்தல் போன்ற விடயங்களை கையாள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வயோதிபர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள் இது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல்வாதியாக மாறுகிறார் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.07

**கொழும்பு பேராயர் கார்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டார் என்பதையே அவரின் பேச்சு காட்டுகிறது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி நடைபெற்ற ஈஸ்டர் தின நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கொழும்பு பேராயர், “ஜனாதிபதி ஆணையத்தின் இறுதி அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு கட்சியை வழிநடத்தி தேர்தலில் வெற்றியடைவதற்கு சிறிசேனவுக்கு ஏதாவது கண்ணியம் இருக்கிறதா? என அவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது-

‘ரஞ்சித் ஆண்டகை அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்டார் என்பதையே தற்போது அவரின் பேச்சு காட்டுகிறது.

இதேவேளை ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பாக, ஜனாதிபதி விசாரணை ஆணையகத்தின் இறுதி அறிக்கையில், எந்த இடத்திலும் முன்னாள் ஜனாதிபதி மீது குற்றம் சுமத்தப்படவில்லை.

மேலும் சிறிசேன மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய சட்டமா அதிபருக்கு மட்டுமே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சு.க. ஒரு புதிய பயணத்தை மேற்கொள்ளத் தயாராகி வரும் நிலையில் இத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

எனினும் அவைகளையும் வெற்றிக்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம். இதேவேளை, பேராயரின் கூற்றுக்குப் பின்னால் எவரும் இருக்கின்றார்களா என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது-என்றார்.

# பஸ் ஓட்டிய மாணவன் கைது

கொழும்பு, ஏப். 07

சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல், 53 ஆசனங்களைக் கொண்ட பஸ்ஸொன்றை செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் 15 வயதான பாடசாலை மாணவனை மீதெனிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தன்னுடைய தந்தைக்குச் சொந்தமான அந்த பஸ்ஸை, தங்கள் வீட்டிலிருந்து மீதெனிய நகரத்துக்கு செலுத்திக் கொண்டு வந்தபோதே அந்த மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இம்முறை, கல்விப்பொதுத் தராதர சாதாரணத் தரப்பரீட்சையில் தோற்றவிருக்கும் வயது குறைந்த ஒருவரை இவ்வாறு பஸ்ஸை செலுத்துவதற்கு அனுமதியளித்தமை தொடர்பில் பஸ்ஸின் உரிமையாளர் எனக் கூறப்படும் தந்தையை கைது செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

# மலையகத்துக்கான 10000 வீடுகள் திட்டம் இரு வாரங்களில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 07

மலையக பிரதேசங்களில் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

வீடமைப்பு திட்டங்களுக்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து 592 மில்லியன் ரூபா கிடைத்துள்ள நிலையில் மேலும் 1057 மில்லியன் கிடைக்கவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேர்தல் காலங்களில் புதிய கிராமங்களை அமைப்பதாக கூறி ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் அரைகுறை நிலையில் உள்ள நிலையில் அவற்றை முழுமையாக நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்த அவர், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேர்தல் முன்னெடுப்புகள் இடம்பெற்ற நவம்பர் மாதமளவிலேயே மக்களை ஏமாற்றுவதற்கான இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவை

கொழும்பு, ஏப். 07

இஸ்ரேலும் இலங்கையும் நேரடி விமான சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காணமாக மேற்கொள்ள முடியாமல் இருந்த விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தூதரகங்கள் மற்றும் சுற்றுலா அமைச்சுகளுக்கு இடையே பேச்சு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த செயல்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என கூறப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து, மே முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் 2000 முதல் 5000 வரை இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ரஷ்யாவின் ஏரோபிளோட், ஷார்ஜா முதல் எயார் அரேபியா, இந்தியாவின் விஸ்டாரா மற்றும் குவைத்தின் ஜசீரா ஆகியவையும் இலங்கையுடன் நேரடி விமான சேவையை தொடங்க பேச்சு நடத்தி வருகின்றன.

இந்நிலையில் சுகாதார ஆலோசனைகளுக்கு ஏற்ப தனது சுற்றுலா இலக்குகளை அடைவதில் இலங்கை கவனம் செலுத்தி, வழக்கம்போல மீண்டும் விமான சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

# புதிய சுற்றுலா சட்டம் கொண்டுவர அனுமதி

கொழும்பு, ஏப். 07

2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை முடிவுறுத்தி புதிய சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை கொண்டுவர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒட்டுமொத்த சுற்றுலாத் துறையை 04 முக்கிய நிறுவனங்களாக பிரித்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சம்மேளனப் பணியகம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் போன்றன நிறுவப்பட்டுள்ளன. ஆனாலும் ஒட்டுமொத்த சுற்றுலாத்துறையும் 04 நிறுவனங்களுக்கு பிரிந்து உள்ளமையால் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் பிரச்னை மேலெழுதல் மற்றும் வளங்கள் வீண்விரயம் போன்றன இடம்பெறுவதாக தெரிய வந்துள்ளது.

அதற்கமைய சுற்றுலாத்துறையின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக 2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை முடிவுறுத்தி புதிய சுற்றுலா நடவடிக்கை சட்டத்தின் சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் அதன்மூலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சம்மேளனப் பணியகம் போன்றவற்றை இணைத்து இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபை எனும் பெயரில் புதிய அதிகாரசபையை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் முதல் 1,000 ரூபா!

## அரசாங்கம் நேற்று உறுதி



கொழும்பு, ஏப். 07

**அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,000ரூபா சம்பளத்தை ஏப்ரல் முதல் வழங்குவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவித்தபோதே குறித்த உறுதி மொழியை அவர் வழங்கினார்.

அதன் பிரகாரம் அனைத்து தோட்ட நிறுவனங்களும் 1,000 ரூபாவை செலுத்த சட்டப்படி கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் வரலாற்றில் முதல் முறையாக தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட சிறு தோட்டத் தொழில்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 1.5 பில்லியனை ஒதுக்கியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு கடந்த ஆண்டு தேயிலை சிறு பங்குதாரர் அபிவிருத்தி ஆணைக்குழுவில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார். (அ)

# ஐ.தே.கவின் தேசியப் பட்டியலுக்கு புதுமுகத்தை களமிறக்கும் ரணில்

கொழும்பு, ஏப். 07

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு புதிய முகமொன்றை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தேசியப் பட்டியல் உறுப்புரிமையை பெற்று பாராளுமன்றம் செல்ல மறுத்த ரணில் விக்கிரமசிங்க கட்சியின் செயற்குழு தீர்மானத்தை மதித்து பாராளுமன்றம் செல்ல கடந்த மாதம் விருப்பம் தெரிவித்த போதும் இறுதியில் அந்த திட்டத்தை அவர் கைவிட்டுள்ளார்.

கடந்த 8 மாதங்களாக நிரப்பப்படாமல் உள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சிரேஷ்ட தொழிற்சங்கவாதியும் பொருளாதார நிபுணருமாகிய ஒருவரை நியமிக்க ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

நாட்டில் தற்போது தொழில்துறை ரீதியான பிரச்சனைகள் அதிகரித்துள்ளதால் தொழில் மற்றும் பொருளாதார துறை நிபுணர் ஒருவரை பாராளுமன்றுக்கு அனுப்ப ரணில் முடிவு செய்துள்ளதாக மேலும் தெரியவருகிறது. (அ)

# பொலிஸார் எனத் தெரிவித்து வவுனியாவில் நகை கொள்ளை

வவுனியா, ஏப். 07

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கார் ஒன்றில் சென்ற குறித்த நபர்கள் வவுனியா தம்பனை புளியங்குளம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு சென்று தங்களை பொலிஸார் என அடையாளப் படுத்திக்கொண்டு, வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதனை நம்பி வீட்டின் உரிமையாளர்கள் அவர்களை அனுமதித்த நிலையில் வீட்டை சோதனை செய்வது போல பாசாங்கு செய்துவிட்டு அங்கிருந்த தங்க ஆபரணங்களைக் களவாடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பாம் எண்ணெய் இறக்குமதி தடைக்கு பேக்கரி உரிமையாளர்கள் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 07

பாம் எண்ணெய் இறக்குமதியை நிறுத்த அரசாங்கம் எடுத்த முடிவு பேக்கரித்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பேக்கரி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன, மாஜரினின் கட்டாய மூலப்பொருள் பாம் எண்ணெய் ஆகும். இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த முடிவை அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் கண்டித்துள்ளனர் என்று கூறினார்.

மாஜரினில் உள்ள 75வீத பொருட்களில் பாம் எண்ணெய் உள்ளது என்றும், பேக்கரி தயாரிப்புகளில் சீனி, மா, முட்டை மற்றும் மாஜரின் முக்கிய பொருட்கள் என்றும் ஜெயவர்தன கூறினார்.

பாம் எண்ணெய் மீதான தடையை மஞ்சள் இறக்குமதி செய்வதற்கான தடையுடன் ஒப்பிட முடியாது என்றும் என்.கே.ஜெயவர்தன குறிப்பிட்டார்.

பாம் எண்ணெய் மீதான தடை நீண்ட கால அடைப்படையில் சாதகமானது. எனினும், இது படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பேக்கரி உரிமையாளர்களின் தேவை பூர்த்தி செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்திருக்க வேண்டும் என்றும் பின்னர் பொருத்தமான முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# தேர்தல் முறையில் உள்ள குறைகளை இனங்காண வருகின்றது விசேட குழு

கொழும்பு, ஏப். 07

தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்கு நாடாளுமன்ற விசேட குழுவொன்றை நியமிப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரேரணையை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் சமர்ப்பித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

சபை ஒத்திவைப்புவேளையின்போது, சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இந்தப் பிரேரணையை சமர்ப்பித்தார்.

குறித்த பிரேரணையின் பிரகாரம், தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காண்பதும் எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களை செயற்படுத்த அவசியமான திருத்தங்களை முன்மொழிவதும் இந்த குழுவின் கடமையாகும்.

அத்துடன் இந்த குழுவின் தவிசாளரும் 15 பேர்களைக் கொண்ட குழு உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். குறித்த குழு அதன் முதலாவது அறிக்கையை முதலாவது அமர்வுக்கு பின்னர் ஆறுமாத காலங்களினுள் அல்லது நாடாளுமன்றத்தினால் நீடிக்கப்படும் காலப் பகுதியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் காலத்துக்கு காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் கூடுவதற்கும் இந்த குழுவுக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என பிரேரணையில் தெரிவிக்கப்படுள்ளது.

# நாடு திரும்புபவர்களுக்கு அனுமதி தேவையில்லை

கொழும்பு, ஏப். 07

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் வெளியுறவு அமைச்சின் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2020 மார்ச் மாதத்தில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட தனிமைப் படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமைய உள்வரும் பயணிகள் அல்லது சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வெளியுறவு அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளின் அனுமதியை பெறவேண்டும் என்று கூறப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புதுவருட காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கக்கூடாது!

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்



கொழும்பு, ஏப். 07

புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கக்கூடாது என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் பொலிஸாரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கமும் இணைந்து சிறிய அளவிலான விழாக்களை நடத்த அனுமதித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் கொரோனா தொற்றின் மூன்றாவது அலை தொடர்பான அச்சுறுத்தல் இருப்பதால், சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை இதுபோன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்னர் சுகாதார அதிகாரிகளிடமிருந்து பொருத்தமான அனுமதியைப் பெற வேண்டும் என்றும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

# புது வருடத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு, ஏப். 07

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு 3,500 பஸ்களை விசேட சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள், தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்காக விசேட பஸ் சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

சேவை புரியும் தொழிற்சாலைகளில் இருந்து சொந்த இடங்களுக்கு ஊழியர்களை அழைத்துச் செல்வதற்காக பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படுமெனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் கொழும்பில் ஏற்படும் கூட்ட நெரிசல் குறைக்கப்படும். அத்துடன், கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தவிர்க்க முடியும்.

இதேவேளை, தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, 09 ஆம் திகதி தொடக்கம் பதுளை, யாழ்ப்பாணம், குருநாகல், அநுராதபுரம், பெலிஅத்த உள்ளிட்ட பகுதிகளுக்கு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளைக்கோட்டில் வீதி கடந்தவரை மோதிக் கொன்ற பொலிஸ் வாகனம்!

கொழும்பு, ஏப். 07

மாத்தறை-திஹகொட பிரதேசத்தின் பந்தந்தர பகுதியில் பாதசாரி கடவையில் வீதியை கடந்த ஒருவர், பொலிஸ் ஜீப்பில் மோதி உயிரிழந்துள்ளார்.

திஹகொட பொலிஸ் நிலையத்தை சேர்ந்த வாகனம், மாத்தறை நீதிவான் நீதிமன்றத்துக்கு சந்தேகநபர் ஒருவரை அழைத்துச் சென்றபோது விபத்து நேர்ந்துள்ளது.

திஹகொடவில் வசிக்கும் 75 வயதானவர், வெள்ளைக் கோட்டு பகுதியில் வீதியை கடந்தபோது, பொலிஸ் ஜீப்பினால் மோதப்பட்டார். அவர் மாத்தறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துவிட்டார்.

விபத்து நடந்த நேரத்தில் வாகனத்தை ஓட்டி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

### புத்தர் சிலை சேதமாக்கியமைக்காக

# கைதாகிய இந்தியப் பிரஜை வைத்தியசாலையில் மரணம்

கொழும்பு, ஏப். 07

குளியாப்பிட்டிய பகுதியில் புத்தர் சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான இந்தியப் பிரஜை, உயிரிழந்துள்ளார்.

வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கைப் பெண்ணை திருமணம் செய்து பல காலமாக இலங்கையில் வாழ்ந்த அந்த நபர், மனைவியின் தொல்லை தாங்க முடியாமல் விகாரையில் படுத்துறங்குவதாகவும், மது போதையில் புத்தர் சிலைகளை சேதமாக்கியதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப். 07

நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன்படி, புது வருடத்தின் பின்னர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார ஆலோசனைக்கு அமைய கோவையொன்றை பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் தற்போது பரீட்சைகளை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து, பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தி நான்!

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 07

**“இலங்கையின் அரசியலையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் சக்தி என்னிடம் உண்டு. இரண்டு பிரதான தேர்தல்களின்போது அதனை நான் நிரூபித்துள்ளேன். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்.”**

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான அணிக்கு எதிராக ஆளும் கட்சிக்குள்ளிருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவரது கட்சி ஆளும் கட்சியிலிருந்து வெளியேறவுள்ளது எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினார். அவர் கொழும்பிலிருந்து சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்குச் சென்றார். அவர் அங்கு முடங்கியிருக்க வேண்டும் எனச் சிலர் விரும்பினார். ஆனால், அவரை அங்கிருந்து கொழும்பு - நுகேகொடவுக்கு அழைத்து வந்து மாபெரும் மக்கள் பேரணியை நடத்திக் காட்டினேன். மீண்டும் அவர் தலைமையிலான அரசை நிறுவுவதில் பெரும் பங்கு வகித்தவன் நான்.

அதேவேளை, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நியமிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் சச்சரவுகள் எழுந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷவையே நியமிக்கவேண்டும் என்று உறுதியாக நின்று அவரைத் தேர்தல் களத்தில் வெற்றியடையச் செய்ததிலும் எனக்கு மிக முக்கிய பங்குண்டு. அந்தவகையில்தான் இலங்கையின் அரசியலையும், ஆட்சியையும் தீர்மானிக்கின்ற சக்தி எனது தலைமையிலான கட்சியிடம் இருக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றேன். இதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் மறக்கமாட்டார்கள்.

தேசிய சுதந்திர முன்னணி ஆளும் கட்சியில் பிரதான பங்காளிக் கட்சி. எமது கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேரப் போகின்றது எனவும், நாம் எதிர்க்கட்சியுடன் கைகோர்க்கப் போகின்றோம் என்றும் அரசுக்குள் இருக்கும் ஒரு சில அணியினர் கூறி வருகின்றனர். மாகாண சபைத் தேர்தலையொட்டி அரசியல் களத்தில் இவ்வாறு வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வருவது வழமை. அரசுக்குள் இருக்கும் ஒரு சக்தியினர் என் மீதும் என் கட்சி மீதும் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம்-என்றார்.

# அசாத் சாலி அடிப்படை உரிமை மனு!

கொழும்பு, ஏப். 07

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, சி.ஐ.டியினரின் தடுப்புக்காவலில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

இன மற்றும் மத நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தெரிவித்ததாகக் குறிப்பிட்டு அவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த மனுவை தனது சட்டத்தரணி மூலம் தாக்கல் செய்த அசாத் சாலி, தான் ஆதாரமற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

கைது மற்றும் தடுப்புக் காவல் மூலம் பிரதிவாதிகளால் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்கும்படி அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவில் பொலிஸ்மா அதிபர், சி.ஐ.டி. இயக்குநர், பொது பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# வென்னப்புவ ஏ.எஸ்.பி. இடமாற்றத்தின் பின்னணியில் எந்த அரசியலும் இல்லை

### அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்



கொழும்பு, ஏப். 07

வென்னாபுவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி) எரிக் பெரேரா இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு பின்னால் எந்த அரசியலும் இல்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வீரசேகர, பெரேராவுடன் மேலும் 30 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் வென்னாபுவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் இடமாற்றத்தில் எந்தவொரு முறைகேடும் இடம்பெறவில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, கடமைகளை ஏற்றுக்கொண்ட புதிய அதிகாரி, பெரேராவை விட தனது வேலையைச் சிறப்பாகச் செய்கிறார் எனவும் அமைச்சர் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

எரிக் பெரேரா தற்போது நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் பணியாற்றி வருகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கைக்காக இந்தியாவிடமிருந்து தடுப்பூசியின் 2ஆவது டோஸ் பெறும் தீவிர முயற்சியில் யுனிசெப்!

கொழும்பு, ஏப். 07

இந்தியாவிடமிருந்து கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) இந்தியாவுடன் தீவிர பேச்சுகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான துணை பிரதிநிதி எம்மா ப்ரிகாம், கொவாக்ஸ் வசதி மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் பங்காளிகள் இந்த விவகாரத்தில் மிக தீவிரமாகச் செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கான அடுத்த கட்ட தடுப்பூசிகளைப் பெறுவதற்கு முடிந்தவரை விரைவுபடுத்தும் முயற்சியாக, இந்திய அரசாங்கத்துடனும் சீரம் இன்ஸ்ரிரியூட் ஒப் இந்தியாவுடனும் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின் பேரில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதை சீரம் நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

சீரம் நிறுவனம் மூலம் பெறப்பட்ட கொவாக்ஸ் வசதியிலிருந்து முதல் தொகுதி கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் மார்ச் 7ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை கட்சிக்கு கொடுக்காமையினாலேயே ரணில் வீழ்ச்சியை சந்தித்தார்



## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேர்காணல்

தமிழில் - சேகு

“ஜனநாயகத்தை கட்சிக்கு கொடுக்காமையினாலேயே ரணில் விக்கிரமசிங்க வீழ்ச்சியை சந்தித்துள்ளார். நாம் அவ் வாறு எமது கட்சியை சேதப் படுத்தப்போவதில்லை. அவரவர் கருத்துக்களை முன்வைக்குமாறே நாம் கூறியுள்ளோம்.நாம் அவை தொடர் பில் கலந்துரையாடி பொதுவான தீர்மானத்திற்கு வருவோம். உடன்படுபவர்களுடன் எம்மால் இணைந்து பயணிக்க முடியும். ஏனைவர்களால் வெளியேறி செல்ல முடியும்” எனக் கூறுகின்றார் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல.

சிங்களப்பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார். அவரது செவ்வியின் தமிழ் வடிவம் வருமாறு

**கேள்வி:** புத்தாண்டிற்கு பலகாரம் செய்வதற்கு தேங்காய் எண்ணெய் இல்லை. பால்சோறு செய்வதற்கு தேங்காய் இல்லை. நாட்டிற்கு என்னதான் நடந்துள்ளது ?

சிலபல குறைபாடுகள் உள்ளன. அரசாங்கத்தை கொண்டுசெல்லும் போது சிலகுறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும். இந்நிலையில் சில தரப்பினர் திட்டமிட்ட வகையில் அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உட்படுத்த முற்படுகின்றனர். இருப்பினும் எமக்கு அதனால் பிரச்சினை இல்லை. அது எதிர்தரப்பினருடைய வியூகமாகும்.நாளை மறுதினம் ஆகும் போது இதற்கான காரணம் வெளிப்படும்.

**கேள்வி:** அப்படி எதுவும் இல்லை என்றா கூறுகின்றீர்கள் ?

நான் உதாரணம் ஒன்றை கூறுகின்றேன். விகாரமகாதேவி பூங்காவிற்கு முன்னால் பல பதாகைகளை போட்டனர். உண்மை கதை என்ன? அதற்காக பணம் செலவழித்தவர், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றம் சென்ற சந்திரகுப்த தேனுவர என்பவரே. குழுவாகவே அங்கு இருந்தனர். சஜித் பிரேமதாச அவருக்கு நன்றி செலுத்தியதை நான் பார்த்தேன். அதற்கான ஆதரவை ரோசி சேநாநாயக்க வழங்கியிருந்தார். ரோசியினுடைய நகரசபை உறுப்பினர்களை கொண்டு அதனை முன்னெடுத்தனர். இறுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சாடுகின்றனர்.

ஆனால் 160 ருபாவாகவிருந்த சீனி தற்போது 110 ருபாவிற்கு விற்பனையாகின்றது. அதேபோல் 120 ருபாவாகவிருந்த அரிசி தற்போது சதோசவின் ஊடாக 98 ருபாவிங்கு வழழங்கப்படுகின்றது.

**கேள்வி:** இருப்பினும் ஒரு கிலோகிராம் நாட்டரிசியின் விலை என்ன ?

ஆம் 110, 115ருபாய் . தேங்காய் எண்ணெய் தொடர்பில் பிரச்சினை உள்ளது. அது தொடர்பான உண்மையை நாம் வெளியிடுவோம். தேங்காய் எண்ணெய் தினம் தோறும் நாட்டிற்கு கொண்டுவரப்படுகின்றது. தேங்காய் எண்ணெய்கான வரியை குறைக்கும் போது பாம் எண்ணெய்கான வரி அதிகரிக்கும் நடவடிக்கைகள் வரலாற்றில் முன்னரும் இடம் பெற்றுள்ளது. அதனை நாம் கண்டுபிடித்தோம். ஆனால் எம்மீது குற்றம் சுமத்துகின்றனர்.

**கேள்வி:** எதிர்த்தரப்பினர் “சேர் பெயில்” என தொடர்ச்சியாக கூறுகின்றனர் . அப்படியெனின் சேர் பெயில் இல்லையா?

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து சிறிது காலத்திலேயே கொரோளா வைரஸ் தொற்று நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும் 194 நாடுகள் கொரோனா தொற்றை கட்டுப்டுத்த முடியாத நிலையில் இருந்த சமயத்தில் எமது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் முதலாவது அலை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அது மாத்திரமல்லாது தேர்தலையும் நாம் நடாத்தினோம். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பாண்மை கிடைக்கப்பபெற்றது. அதனை தொடர்ந்து நாம் சாதாரண தரத்தில் தேர்ச்சிபெறாத ஒரு இலட்சம் மாணவர்களுக்கு அரச வேலைவாய்ப்பை வழங்கும் திட்டத்தின் ஊடாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தோம். இதுவரையில் அந்த திட்டத்தின் கீழ் 60 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளோம். அவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு நிரந்தரமாக்கப்பட்டு ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளது. அதனை தொடர்ந்து வேலையில்லாப் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை வழங்கியுள்ளோம். இதன் காரணமாகவா சேர் பெயில் என கூறுகின்றனர். இது “பெயில்” எனின் எது வெற்றிகரமான வழி என கூறுங்கள்.

**கோள்வி:** “நல்லவேளை கோட்டாபய ஜனாதிபதி ஆனது. இல்லை எனின் அவர் வேலைகளை சிறந்த முறையில் செய்பவர் என எண்ண நேரிட்டிருக்கும்” என ஊடகங்கள் சில விமர்சனங்களை முன்வைக்கின்றனவே?

ஆம். அது தொடர்பிலேயே நான் கூறினேன். பிபிலயில் வீட்டை நிர்மாணிக்கும் போது கொழும்பில் போஸ்டர் ஒட்டும் காலம் இருந்தது. இன்று 14022 வீடுகள் அனைத்து கிராமசேவகர் பிரிவுகளிலும் நிர்மாணிக்கப்படுகின்றன. அந்த வீடுகள் வறிய குடும்பத்தை சேர்ந்தோருக்கு வழங்கப்படும்.அந்த மக்களை கடனாளிகளாக ஆக்கப்போவதும் இல்லை. சஜித்பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது 3இலட்சம் ருபாவை கடனாக வழங்கினார். சமூகத்தையே கடனாளிகளாக்கினார். நாம் கடனல்லாது வறிய மக்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்கின்றோம். அப்படியாயின் சேர் பெயிலா? அதேபோன்று பாதை நிர்மாணங்களையும் முன்னெடுத்துள்ளோம். மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பணிகளும் ஆரம்பமாகவுள்ளன.

கிராமத்தில் கடை நிர்மாணிப்பதற்காக பெண்களுக்கு 36 இலட்சம் ருபாய் வழங்கியுள்ளோம். அனைத்து பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 200 மில்லியன் ருபாய் வரையில் ஒதுக்கியுள்ளோம் . எமது பயணத்தை சிறந்த முறையில் நாம் முன்னெடுத்து செல்கின்றோம்.

**கேள்வி:** கம்பஹா மாவட்ட வன ஜீவராசிகள் அதிகாரியாக தேவானி ஜெயத்திலகவை அமைச்சர்கள் சாடுகின்றனர் அரச அதிகாரிகளை அச்சுறுத்தும் நோக்கிலா அவ்வாறு செயற்படுகின்றனர்?

இல்லை எந்த பிரச்சினையும் இல்லை. நீங்கள் அவ்வாறு கூறுவீர்கள் என்றால் அதற்கு என்னிடம் பதில் இல்லை. அவரை அச்சுறுத்தவில்லை மாறாக அவர்களுடைய கருத்தை முன்வைக்கின்றனர். ஏனெனில் அதிகாரிகள் சரியான கருத்தை முன்வைப்பது வரவேற்றத்தக்க விடமாகும். இருப்பினும் இந்த அதிகாரியின் பின்னணியில் யாரோ உள்ளனர். அவர்கள் தான் இந்த நாடகத்தை அரசங்கேற்றுகின்றனர்.

**கேள்வி:** சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள ஆர்கேட் அரசாங்கத்தின் சகாகக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அநுரகுமார திசாநாயக்க கூறியுள்ளாரே ?

நானும் அந்த கதையை கேள்விப்பட்டேன். இப் பொழுதும் அவர்கள் அரசாங்கம் தமது சகாக்களுக்கு சொத்துக்களை வழங்குவதை நிறுத்தவில்லை என்றவாறான கருத்துக்களையே முன்வைக்கின்றனர். இந்த கதையை கேட்கும் போது என்ன கூறுகின்றனர் என தொன்றுகின்றது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

**கேள்வி:** அந்தத் தகவல் பொய்யானது என்றா கூறுகின்றீர்கள்?

நிச்சயமாக. ஏனெனில் இராஜாங்க அமைச்சர் நாளக்க கொடஹேவா பாராளுமன்றத்தில் அதற்கு பதிலளித்தார். அப்பொழுது அநுரகுமார அங்கிருந்து தலைமறைவானார். அவருடைய சகாககள் இருவரே அப்போது இருந்தனர்.

**கேள்வி:** அரசாங்கத்தினுள் இருந்துகொண்டு முன்னாள ஜனாதிபதியி மைத்திரபால சிறிசேனவின் கட்சியினர் அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கும் பட்சத்தல் இருக்கும் அரசாங்கம் அப்செட் ஆகும் நிலைமை ஏற்படும் அல்லவா?

அவர் வேறு கட்சியில் அல்லவா உள்ளார். 11 கட்சிகள் எம்முடன் உள்ளன. ஆகவே அந்த கட்சி அரசாங்கத்தை அமைப்போம் என்றால் அதற்கு நாம் ஆசி வழங்குவோம். அரசங்கத்தை அமைக்கும் போது எம்மிடமிருந்து வெளியேறுவர்.

**கேள்வி:** மொட்டுக்கட்சியின் பங்காளிக்கட்சிகள் முரண்படும் நிலைமையல்லவா காணப்படுகின்றது?

எந்த தரப்பிலும் இருக்க முடியாதவர்கள் இருக்கின்றனர். அவர்களினால் எப்போதும் எதிலும் இருக்க முடியாது. அத்தகையோருக்கு இத்தகைய நிலைமையே காணப்படும்.

**கேள்வி:** வீமல் வீரவன்சவை வெளியேறி செல்லுமாறு கூறினிர்கள் அல்வா?

முழுமையான ஜனநாயகம் என்பது அது தான். அந்த ஜனநாயகத்தை கட்சிக்கு கொடுக்காமையினாலேயே ரணில் விக்கிரமசிங்க வீழ்ச்சியை சந்தித்துள்ளார். நாம் அவ்வாறு கட்சியை சேதப்படுத்தப்போவதில்லை. அவரவர் கருத்துக்களை முன்வைக்குமாறே நாம் கூறியுள்ளோம்.நாம் அவை தொடர்பில் கலந்துரையாடி பொதுவான தீர்மானத்திற்கு வருவோம். உடன்படுபவர்களுடன் எம்மால் இணைந்து பயணிக்க முடியும். ஏனைவர்களால் வெளியேறி செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா தோழி சசிகலா பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம்: திட்டமிட்ட சதியா?

## – தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021



ஆ. விஜயானந்த்
பிபிசி தமிழுக்காக

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஜெயலலிதாவின் தோழியும், அதிமுக பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட வருமான வி.கே.சசிகலாவுக்கு வாக்கு இல்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அரசியலில் இருந்து சசிகலா ஒதுங்கியுள்ள நிலையில், 'வாக்களிக்கவும் வாய்ப்பில்லை' என்ற சூழலால் அவரது குடும்பத்தினர் அதிர்ச்சியில் உள்ளனர். என்ன நடந்தது?

**ஆன்மிக பயண சர்ச்சை**

சொத்துக் குவிப்பு வழக்கின் சிறை தண்டனை மற்றும் கொரோனா தொற்றுக்கான சிகிச்சை ஆகியவை முடிந்து பெங்களூரு இருந்து கடந்த பெப்ரவரி மாதம் சசிகலா சென்னை திரும்பிய பிறகு, தியாகராய நகரில் உள்ள இளவரசியின் மகள் கிருஷ்ண பிரியாவின் வீட்டில் தங்கியுள்ளார்.

அங்கிருந்தபடியே அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து வந்தவர், ஒரு கட்டத்தில் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவதாக அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார். இதன்பிறகு தஞ்சாவூர், காஞ்சிபுரம் என ஆன்மிக தலங்களுக்கு அவர் சென்று வந்தார்.

அவரது பயணத்தின்போது உள்ளூரில் போட்டியிடும் அ.ம.மு.க வேட்பாளர்கள் அவரைச் சந்தித்து ஆசி பெறுவதையும் வழக்கமாக வைத்திருந்தனர். 'இது ஆன்மிக பயணமாக.. அரசியல் பயணமா?' எனவும் சர்ச்சைகள் எழுந்தன.




**சசிகலா, இளவரசி, விவேக் - 3 பேரின் வாக்குகள்**

சசிகலாவின் ஆன்மிக யாத்திரையின்போது, செய்தியாளர்கள் கேள்விகளை அடுக்கியபோதும், 'கடவுளை வழிபட மட்டுமே வந்தேன்' என சசிகலா விளக்கமும் கொடுத்தார்.

இந்நிலையில், ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள வாக்குச் சாவடியில் வி.கே.சசிகலாவின் பெயர் இல்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து சசிகலாவின் உறவினர்கள் சிலரிடம் பேசினோம்.

'போயஸ் கார்டனில் உள்ள வேதா இல்லம்தான், கடந்த 30 ஆண்டுகாலமாக சசிகலாவின் முகவரியாக இருந்தது. இதே முகவரியில் சசிகலாவின் சகோதரர் ஜெயராமனின் மனைவி இளவரசி, விவேக் ஆகியோர் வசித்து வந்தனர். இவர்களுக்கான வாக்காளர் அடையாள அட்டையும் இதே முகவரியில் இருந்தது."

'ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் ஜெயலலிதா வாக்களிக்கச் செல்லும்போதெல்லாம், சசிகலாவும் உடன் சென்று வாக்களிப்பது தொடர்ந்து நடந்து வந்தது. இந்நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா சிறை சென்ற பிறகு ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்தை, அரசுடைமையாக்கி விட்டனர். இதனால், இயல்பாகவே வாக்களிக்கும் உரிமையை சசிகலா இழந்துவிட்டார். அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தவருக்கு, இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையும் இல்லாமல் போனதில் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார்," என்கின்றனர் அவர்கள்.

**திட்டமிட்ட சதியா?**

'முகவரி மாற்றம் குறித்து மனு கொடுத்திருந்தால் சசிகலாவுக்கு வாக்குரிமை கிடைத்திருக்குமே?" என ஆயிரம் விளக்குத் தொகுதி அ.ம.மு.க வேட்பாளர் வைத்தியநாதனிடம் கேட்கப்பட்டது.

'அவர் இந்தத் தேர்தலில் வாக்கு செலுத் தினால் மிகப் பெரிய புரட்சி வந்துவிடும். 2011 தேர்தலில் ரஜினி ஓட்டுப் போட்டு வந்த பிறகு, யாருக்கு வாக்களித்தேன் என சிம்பல் மட்டும்தான் காட்டினார். அது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. வாக்க ளிப்பது என்பது ஒருவரின் அடிப்படை உரிமை. பொதுவாக, ஒருவர் இறந்தால் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இருந்து அவரது பெயர் நீக்கப்படும். இல்லாவிட்டால், அவரது பெயரை நாளிதழ்களில் குறிப்பிட்டு விளம்பரம் செய்வார்கள். சசிகலா எங்கே இருக்கிறார் என்பது தமிழக அரசுக்கு நன்றாகவே தெரியும். சிறை அதிகாரிகள் மூலமாகக்கூட அவருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்க வேண்டும். அப்படிச் செய்யவும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தவறிவிட்டனர்" என்கிறார்.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதா?' என்ற கேள்விக்கு பதிலளித்த அவர்,

"ஆமாம். 15 நாட்களுக்கு முன்னரே நாங்கள் மனு கொடுத்தோம். எங்களிடம் பேசிய அதிகாரிகள், 'இறுதிப் பட்டியலில் சேர்க் கிறோம்' என்றார்கள். ஆனால், இறுதிப் பட்டியலில் அவரது பெயரைச் சேர்க்கவில்லை. யாருடைய அழுத் தத்தின் பெயரால் அவரது பெயரை சேர்க்க மறுத்தார் கள் என்பது எங்களின் கேள்வி. சசிகலாவின் ஒரு ஓட்டு, ஆயிரம் விளக்குத் தொகுதியில் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறோம். சசிகலாவுக்கு ஓட்டுரிமை கொடுக்கும் வரையில் இந்தத் தொகுதியில் தேர்தல் முடிவுகளை நிறுத்தி வைக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்துவோம். இல்லாவிட்டால் நாளை பேலட் வாக்கை சசிகலா செலுத்துவதற்கு உரிமை கோருவோம். தேர்தல் ஆணையம் எடுக்கும் முடிவுகளைப் பொறுத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த உள்ளோம்," என்கிறார் வைத்தியநாதன்.

**அ.தி.மு.க தரும்அரசியல் அழுத்தமா?**

சசிகலாவுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதில் அரசியல் உள்ளதா?' என அ.தி.மு.க செய்தித் தொடர்பாளர் பெங்களூரு புகழேந்தியிடம் பேசினோம்.

'நிச்சயமாக இல்லை. சசிகலா, இளவரசி, விவேக் ஜெயராமன் ஆகியோருக்கு வேதா நிலைய முகவரியில் வாக்குகள் இருந்தன. அ.தி.மு.க அரசு, எப்போது வேதா இல்லத்தை அரசுடையாக்கியதோ, அப்போதே அவர்களின் சொந்தங்கள் வாக்காளர் பட்டியலில் முகவரி மாற்றம் தொடர்பான மனுவை தேர்தல் ஆணைய அதிகாரிகளிடம் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு மனு கொடுப்பதற்கு சசிகலா தரப்பினர் தவறிவிட்டார்கள். அவர் அரசியலுக்கு வராமல் ஒதுங்கியிருந்து, 'இந்தக் கட்சியும் ஆட்சியும் நன்றாக இருக்க வேண்டும்' எனக் கூறியதை ஓ.பி.எஸ் வரவேற்றார். ஒருவேளை சசிகலா ஓட்டு போட்டிருந்தால்கூட இரட்டை இலைக்குத்தான் போட்டிருப்பார். அந்தவகையில் எங்களுக்கு ஒரு வாக்கு இழப்பு ஏற்பட்டுவிட்டதாகத்தான் பார்க்கிறேன்," என்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

34-B

நேற்றைய தொடர்ச்சி.....





தரப்படட விடைகளில் 01. 9உள்ளது
02. 06உள்ளது ஆனால் விடை.03. 04 இப பெறுமானம் இல்லை இது
சரியான விடை 03


**2017 11**

எண் கோலத்தினைக் கவனியுங்கள். வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படுங்கள்.
எண் கோலத்தினைக் கவனியுங்கள் விரிக்கப்பட்ட அட்டையின்

முகங்கள்




\+ 3 + 7 + 5= 15




\+ 9 + 5 + 7= 21


இதுவே சரியான விடை 02


**2017 11**

**5 x 4 = 20 +2=22 6 x 3 = 18+8=26**


**7 x 2 = 14 +?=17**

இங்கு ? ஆனது 3 ஆகும்எனவே




சரியான விடை 01




ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# செல்வந்த கட்சிகளுக்கு எதிராக போராடும் ஒரே கட்சி ஜே.வி.பி.!

*சஜித் நகைச்சுவையாளர்*
*அநுரகுமார கடும் சாடல்*



கொழும்பு,ஏப்.07

**செல்வந்த கட்சிகளுக்கு எதிராகப் போராடும் ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே என அந்தக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தற்போது தமது கட்சிக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் செயல்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

ஹிங்குராங்கொடை, புலத்திசி, தாருகா மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தியாக வீரர்களை நினைவுகூரும் 50 ஆவது ஆண்டு நிகழ்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஈஸ்ரர் தாக்குதலை நடத்தியவர்கள் யார்? எதற்காக அதனைச் செய்தனர்? இதனை வெளிப்படுத்துவது முக்கியம். ஜனாதிபதி அமைக்கும் இவ்வாறான பெட்டை கோழிகளை ஒத்த ஆணைக் குழுக்களை வைத்து எம்மை பயமுறுத்த எண்ணுகின்றனர். இன்று போட்டிமிகு வர்த்தகம் மனித குலத்துக்கு எதிரியாக வுள்ளது. உணவுக்கும் மனிதனுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு காணப்பட்டது.

தற்போது போட்டி அதிகரித்துள்ளது. போட்டிக்காக தரம் குறைந்த பொருள்களை இறக்குமதி செய்கின்றனர். தற்போது தரம் குறைந்த தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்காகவே தர நிர்ணய சபை ஒன்று உருவாக்கப்படுகின்றது. இவ்வாறு போட்டி மிகு தன்மையால் முழு சமூகமும் பாதிப்படைகின்றது. போட்டிமிகு வியாபார முறைமை கீழ்மட்ட சமூகத்துக்கு மரணத்தை மாத்திரமே கொடுத்துள்ளது. சஜித் இன்று நகைச்சுவையாளராக மாறியுள்ளார். திரைப்படங்களில் ஒருபோதும் நகைச்சுவையாளர் கதாநாயகனுக்கு சவாலாக இருப்பதில்லை. எப்போதும் செல்வந்த கட்சிகளுக்கு எதிராகப் போராடும் ஒரே கட்சி மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே. எதிரிகள் அதனை அறிவார்கள்- என்றார். (எ)

*பிரதமர் மஹிந்த தலைமையில்*

# மாகாணத் தேர்தல் குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு,ஏப்.07

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து இறுதித் தீர்மானத்தை எடுக்க எதிர்வரும் 19 ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். (எ)



# தொல்பொருள் ஆய்வு மூலம் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது!

*விதுர விக்கிரமநாயக்க உறுதி*

கொழும்பு,ஏப்.07

தொல்பொருள் ஆய்வு மூலம் எந்தவொரு மதத்துக்கும், இனத்துக்கும் பாதிப்பு ஏற்படாது என இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய் மூல கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக பாராளு மன்றத்தில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விதுர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் வரலாற்றை கண்டறிவதற்கு நாட் டுக்கு உரிமை உண்டு என்றும் அவர் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மல நாதன் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# சம்பளம் வழங்க மறுக்கும் தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஏப்.07

தோட்டத் தொழிலாளர் களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை 1000 ரூபா வரை அதிகரிப்பதற்கு எதிராக தோட்ட நிறுவனங்கள் கோரியிருந்த தடை உத்தரவை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துள்ளது.

இதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

வழக்கின் இறுதித்தீர்ப்பு வழங்கப்படும் வரை தொழில் வழங்குநர்கள் 1000 ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்குவது அவசியமாகும்.

இதற்கு மாறாகச் செயல்படுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம் தொழில் ஆணையாளருக்கு இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பில் விஷேட பொருளாதார மத்திய நிலையங்கள்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு, ஏப்.07

**யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்களில் விஷேட பொருளாதார மத்திய நிலையங்களைத் திறந்து வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திகளை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கும், போட்டித்தன்மை மூலம் மிகவும் வினைத்திறனான விலைப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமான வகையில் விஷேட பொருளாதார மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான 15 பொருளாதார மத்திய நிலையங்கள் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றன. இதற்கமைய மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் விஷேட பொருளாதார மத்திய நிலையங்களின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் விஷேட பொருளாதார மத்திய நிலையத்தின் முதலாம் கட்ட கட்டுமானப்பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. குறித்த விஷேட பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கும் முறையான பொறிமுறையை பின்பற்றி குறித்த விஷேட பொருளாதார மத்திய நிலையத்தின் வியாபார அலகுகளை ஒதுக்கி வழங்குவதற்கும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

### 6 மில்லியன் ஸ்புட்னிக் - வி தடுப்பூசி டோஸ்கள் வாங்க அமைச்சரவை அங்கீகாரம்

கொரோனா பரவலைத் தடுப்பதற்கு மேலதிகமாக 06 மில்லியன் ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை குழுவின் பரிந்துரைக்கமைய 07 மில்லியன் ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளை, ஒரு தடுப்பூசி 9.95 அமெரிக்க டொலர்கள் வீதம் 69.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசியின் அளவுக்கு மேலதிகமாக 06 மில்லியன் ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காகவும் சுகாதார அமைச்சர், சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# ஆளும் கூட்டணியைப் பலப்படுத்தி மாகாண சபைத் தேர்தலில் போட்டி

## தாரக பாலசூரிய தெரிவிப்பு

கேகாலை, ஏப்.07

சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும், பங்காளிக் கட்சிகளுடன் கூட்டணியமைத்துப் போட்டியிட்டதால் அமோக வெற்றி பெற முடிந்தது. எனவே, ஆளும் கூட்டணியைப் பலப்படுத்தி மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட எதிர்பார்த்துள்ளோம் என பிராந்திய உறவுகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

கேகாலை நகரில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்



அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நாட்டு மக்கள் தோற்றுவித்தனர். ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து பல சவால்களை எதிர் கொள்ள நேரிட்டுள்ளது. பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் வீழ்ச்சியடைந்திருந்த தேசிய பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது.

சிறந்த திட்டமிடல் காரணமாக பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து பொறுப்புடன் செயல்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்த நாடுகளைக் காட்டிலும் இலங்கை கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி சர்வதேச மட்டத்தில் 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.- என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் அரசு வாக்குறுதியை மீறிவிட்டது

## சஜித் பிரேமதாஸ சாடல்



கொழும்பு, ஏப்.07

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காகவே தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் பெரும்பான்மை ஆதரவை வழங்கினர். ஆனால், அரசாங்கம் அதனை மறந்து செயல்பட்டு வருகின்றது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி வழங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசாங்கம், வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு அலுவலகம் முன்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக எமது கட்சியின் உறுப்பினர் நளின் பண்டாரவுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அழைப்பு விடுத்திருந்தது. கட்சித் தலைவர் என்ற வகையில் எமது உறுப்பினர்களைப் பாதுகாக்க நான் கடமைபட்டுள்ளேன். அதனடிப்படையிலேயே நான் இங்கு வந்தேன். இதன்போது உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலே பல்வேறு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்துக்கே பாரிய பொறுப்பு உள்ளது. அதற்காகவே நாட்டு மக்கள் அவர்களுக்குப் பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவங்களுக்கு பின்னாலிருந்து செயல்பட்ட பிரதான சூத்திரதாரி மற்றும் அதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியவர்கள் என அனைவரும் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதுதொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி வாழங்கியுள்ளது. அதனால் அதனை நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனினும் அரசாங்கம் இந்த விசாரணைகள் தொடர்பில் காலங்கடத்தி வருகின்றது.

அமெரிக்காவில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அடிப்படைவாதத் தாக்குதல் தொடர்பில், அப்போதைய அமெரிக்க அரசாங்கத்தால் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆணைக்குழு முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து, அதன் அறிக்கையை பகிரங்கப் படுத்தியிருந்தது. ஆனால், எமது நாட்டில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஆணைக்குழுவின் செயல்பாடு அவ்வாறு அமைந்திருக்க வில்லை- என்றார். (எ)

# அரசியல் பழிவாங்கலை அரசு நிறுத்த வேண்டும்

## கண்டி எம்.பி. வேலுகுமார் வலியுறுத்து

கண்டி,ஏப்.07

உதாகம்மான தனி வீட்டுத் திட்டங்களை நடுவழியில் கைவிட்டு அரசியல் பழிவாங்கல் செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சியில் தேசிய வீடமைப்பு அமைச்சராக தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ செயல்பட்டார். இதன்போது, நகர, கிராம மக்களுக்கு பல வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் தோட்ட மக்களுக்கான வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது. நாம் தொடர்ச்சியாக நகர, கிராம வீடமைப்புக்கு ஒத்ததாக தேசிய வீடமைப்பு அமைச்சின் ஊடாகவும், தோட்டப் பகுதிகளில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தோம். இதன்படி, 2018- 19 ஆம் ஆண்டுகளில் தோட்டப் பகுதிகளிலும் உதாகம்மான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2019 ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது, அவை அவற்றின் முதலாம், இரண்டாம் கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இறுதி வேலைகள் எஞ்சிய நிலையில் இருந்தது. தற்போது இவ் உதாகம்மான தனி வீட்டுத் திட்டங்களை நடுவழியில் கைவிட்டு அரசியல் பழிவாங்கல் செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

அரசாங்கம் எதுவாக இருந்தாலும் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை பூரணப்படுத்த பயனாளிகளுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும். மாறாக இன்றைய அரசாங்கம் அவற்றை கைவிட்டு, புதிய வேலைத்திட்டங்களை தொடங்குவதாக குறிப்பிடுகின்றது. இவ் வேலைத் திட்டம் தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்டதாலேயே இவ்வாறு செய்ய முற்படுகின்றனர்.

இவ்வாறான அரசியல் பழிவாங்கலை கைவிட்டு, அப்பாவி தோட்ட மக்களின் வீடுகளைப் பூரணப்படுத்த அவசியமான கொடுப்பனவை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு, நாம் தான் ஆளும் தரப்பு என மார்தட்டிக் கொண்டவர்கள் வழிசமைக்க வேண்டும். அதனை விட்டு அரசாங்கத்தோடு சேர்ந்து, பித்தலாட்டம் ஆடி, மக்களை ஏமாற்ற வேண்டாம் என கூறி வைக்க விரும்புகின்றேன் என அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)


# சிவப்பு சீனி 10 ரூபாயால் விலை குறைப்பு

கொழும்பு, ஏப்.07

எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு சிவப்பு சீனி ஒரு கிலோவின் விலையை 10 ரூபாயால் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனஇராஜாங்க அமைச்சர் ஜானக வக்குப்புர தெரிவித்துள்ளார்.கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்விவகாரத்தில் தலையிடாதீர்கள் அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை!




பீஜிங், ஏப். 07

**"தங்களை உலகின் மிகப்பெரிய நாடு என்று கூறும் எந்த நாட்டின் கருத்தையும் சீனா ஏற்றுக் கொள்ளாது. மேலும், உலக விவகாரங்களில் அமெரிக்கா அதிகமாகத் தலையிடுகின்றது. சீனாவின் அயல் நாடுகளுடனான உறவில் அமெரிக்கா இதேபோல மீண்டும் மீண்டும் தலையிட்டால் அதனை சீனா தைரியமாக எதிர்கொள்ளும்", என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யி எச்சரித்துள்ளார்.**

அமெரிக்கா - சீனா இடையே நிழல் போர் நீண்டகாலமாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. அண்மையில் ஹொங்கொங், உய்குர் முஸ்லிம்கள் விவகாரத்தில் அமெரிக்கா சீனாவை கண்டித்து கருத்து வெளியிட்டிருந்தது. இதற்குப் பதிலக்கும் விதமாகவே சீனாவின் வெளிவிவகார அமைச்சர் தற்போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மேலும், "பொய்யான கருத்துக்கள் மூலமாக சீனாவுக்கு பொருளாதார தடை விதிப்பதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும். சீனா அயல் நாடுகளு டன் பேச்சுக்கு தயாராகவே உள் ளது. அது அனைத்து நாடுகளும் ஏற்கும் வகையில் இருக்க வேண்டும். அமெரிக்கா இந்த விடயங்களில் தலையிடக்கூடாது. இதே போன்று சீனாவின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடக் கூடாது" - என்றார். (ஐ)

*ஈஸ்டர் தாக்குதல் திட்ட சந்தேகம்:*

# தாயும் நான்கு மகள்களும் பிரான்ஸில் கைதாகினர்!

பாரிஸ், ஏப். 07

பிரான்ஸின் தென் மேற்கில் டேவேஷ் நகரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் ஒருவரும் அவரின் நான்கு மகள்களும் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 14 வயதுச் சிறுமி.

அத்துடன், அந்த வீட்டில் உள்ளூர் தயாரிப்பு வெடிபொருட்கள் உட்பட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. போத்தல்கள், அலுமினியம், சிறிய இரும்புக் குண்டுகள் (போல்ஸ்) என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்களில் 18 வயது மகள் ஈஸ்டர் பெருநாளை ஒட்டி மொன்ட்பெல்லியர் பகுதியில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்திருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அவரின் தொலைபேசி உரையாடல்கள், சமூக வலைத்தள பகிர்வுகள், மற்றும் வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் என்பன தேவாலயத்தில் தாக்குதல் நடத்தும் திட்டம் இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக பயங்கரவாத ஒழிப்பு விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப யுவதி தீவிரவாத இயக்கங்களின் இணையத்தளங்களை அணுகி இருப்பதும் தெரியவந்துள்ளது. அவரது கணனி மற்றும் டிஜிற்றல் சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. தீவிரவாத அமைப்புகளோடு இவர்களுக்குத் தொடர்பு இருக்கிறதா என்பதை அறிய விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ஐ)

# நைஜீரிய சிறை மீது தாக்குதல்: 1844 கைதிகள் தப்பியோட்டம்!

நைகர், ஏப். 07

நைஜீரியாவில் சிறைச்சாலை ஒன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அந்தச் சிறையில் இருந்த 1,844 கைதிகள் தப்பியோடியுள்ளனர் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவின் தென்கிழக்கு நகரமான ஓவெர்ரியில் உள்ள சிறைச்சாலை அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை லொறி, பிக்-அப், பேருந்து உள்ளிட்ட வாகனங்களில் வந்திறங்கிய ஆயுததாரிகள் திடீரென தாக்குதலை தொடுத்து சிறைச்சாலைக்குள் நுழைந்தனர்.



இதன்போதே சிறையில் இருந்த 1,800 கைதிகள் தப்பியோடியுள்ளனர். தாக்குதலை அடுத்து காணாமல் போயிருந்த ஆறு கைதிகள் திரும்பி வந்துள்ளனர். 35 பேர் தப்பிக்க மறுத்துவிட்டனர்.

தடை செய்யப்பட்ட பிரிவினைவாத குழுவான பியாஃப்ராவின் பழங்குடி இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும், இந்தக் குற்றச்சாட்டை பியாஃப்ரா பிரிவினைவாதிகள் மறுத்துள்ளனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் கையெறி குண்டுகள், இயந்திர துப்பாக்கிகள், வெடிபொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது அராஜகவாதிகள் மேற்கொண்ட பயங்கரவாத செயல் என நைஜீரியா ஜனாதிபதி முஹம்மது புஹாரி கண்டனம் தெரிவித்துள்ளார். சிறைச்சாலை மீது தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் தப்பியோடியவர்களைத் தேடிப் பிடிக்க பாதுகாப்பு படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# ரோக்கியோ ஒலிம்பிக்கில் வடகொரியா பங்கேற்காது!

## கொரோனா தொற்று அச்சம்!

பியொங்யாங், ஏப். 07

ஜப்பானில் இவ்வாண்டு நடைபெறவுள்ள ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கப் போவதில்லை என்று வட கொரியா அறிவித்துள்ளது. கொரோனா தொற்று நோயிலிருந்து தங்கள் நாட்டு வீரர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்நாடு கூறியுள்ளது.

தங்கள் நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று நோய் பாதிப்பு ஏதும் இல்லை என வட கொரிய தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், அவ்வாறு வடகொரிய முற்றிலுமாகத் தப்பிப் பிழைத்திருப்பது சாத்தியமில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனினும், வட கொரியாவில் சுயாதீன ஊடகங்கள் செயல்பட முடியாமை மற்றும் அங்குள்ள கடும் கட்டுப்பாடுகளால் நிலைமைகளை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை. இந்நிலையில் ஒலிம்பிக்கில் பங்கேற்கப் போவதில்லை என்ற வட கொரியாவின் அறிவிப்பால் விளையாட்டு ஊடாக வட கொரியாவுடனான உறவுகளை வலுப்படுத்தும் தென் கொரியாவின் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அறிவிப்பின் மூலம் தொற்றுநோய் அச்சம் காரணமாக இந்த ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியைத் தவிர்த்த முதல் பெரிய நாடாக வட கொரியா திகழ்கிறது. (ஐ)

# கானா நாட்டின் கடற்கரையில் 60 டொல்பின்கள் இறந்து ஒதுங்கின!



ஆபிரிக்க நாடான கானாவின் கடற்கரையில் அண்மைய நாட்களில் 60 க்கும் மேற்பட்ட டொல்பின் மீன்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கி உள்ளன என்று அந்த நாட்டு சுற்று சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


உயிரிழந்த டொல்பின்களின் உடலில் எந்தக் காயமும் ஏற்படவில்லை, கடலின் நிறம் மற்றும் வெப்பம் என்பனவும் சாதாரண நிலையிலேயே உள்ளதாக கானா மீன்வள ஆணையத்தின் நிர்வாக இயக்குநர் மைக்கல் ஆர்தர் - டாட்ஸி ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த் நிலையில் டொல்பின்களின் இறப்புக்கான காரணத்தை கண்டறிய, அவற்றின் மாதிரிகள் ஆய்வகத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன. இவற்றின் உயிரிழப்பு காரணமாக டொல்பின்கள் மற்றும் சமீபத்தில் பிடிக்கப்பட்ட ஏனைய மீன்களை உணவாக உட்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி பதவியில் மேலும் நீடிக்கும் சட்டமூலத்தில் கைகையழுத்திட்டார் புடின்

மொஸ்கோ, ஏப். 07

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேலும் இரு முறை அந்தப் பதவிக்கு தேர்தலில் போட்டியிட வழி வகுக்கும் ஒரு சட்டமூலத்தில் கையெழுத்திட்டுள்ளார். இது அவரது பதவிக் காலத்தை 2036 ஆம் ஆண்டுவரை நீட்டிக்க வழிவகுக்கும்.



ஏற்கனவே, இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆட்சியில் இருக்கும் 68 வயதான ரஷ்ய ஜனாதிபதி புடின் திங்களன்று குறித்த சட்டமூலத்தில் கையெழுத்திட்டார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

தற்போது நான்காவது தடவையாகவும் பதவி வகிக்கும் புடினின் பதவிக் காலம் 2024 இல் முடி வடையவுள்ளது. திங்களன்று அறிவிக்கப்பட்ட புதிய சட்டம், அடுத்தடுத்த ஜனாதிபதி தேர்தல்களில் புடின் போட்டியிட விரும்பினால், அவர் மேலும் ஆண்டுக்கு 6 ஆண்டுகள் வீதம் ஜனாதிபதியாக பதவி வகிக்க அனுமதிக்கக்கூடும்.

இந்த நிலையில் 2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாமா என்ற தீர்மானத்தை பின்னர் அறி விப்பேன் என்று புடின் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



லா லிகா உதைபந்து தொடர்:

# 2ஆவது இடத்தில் பார்ஸிலோனா!



வல்லடோலிட் அணியை வெற்றி கொண்டதன் மூலம் லா லிகா தொடரில் இரண்டாவது இடத்தை பிடித்தது பார்ஸிலோனா அணி. இதனால் ரியல் மட்ரிட் அணி மூன்றாவது இடத்துக்கு பின்தள்ளப் பட்டது.

ஸ்பெயினின் பிரபல தொடரான லா லிகா தொடர் தற்போது நடந்து வருகின்றது. இதில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் பார்ஸிலோனா அணியும், வல்லடோலிட் அணியும் மோதின.

இரு அணிகளும் சிறப்பாக விளையாடின. எனினும் பந்தை அதிக நேரம் தனது கட்டுப்பாட்டில் பார்ஸிலோனா அணி வைத்திருந்தபோதும் அந்த அணியால் முதல் பாதியில் கோல் எதையும் அடிக்க முடியவில்லை. வல்லடோலிட் அணியும் முதல் பாதியில் கோல் போடவில்லை.

இரண்டாவது பாதியிலும் நீண்டநேரமாக கோல் எதனையும் போடவில்லை. இந்நிலையில் தவறான ஆட்டம் காரணமாக வல்லடோலிட் அணியின் ஒஸ்கார் பிலானோ 79 ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். தொடர்ந்த ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் - 90ஆவது நிமிடத்தில் பார்ஸிலோனாவின் ஒயுஸ்மன் டெம்பிள் கோல் ஒன்றை அடித்தார்.

இதனால் பார்ஸிலோனா அணி, இந்தப் போட்டியை 1 -0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. இந்த வெற்றியின் மூலம் இந்தத் தொடரில் இரண்டாவது இடத்தை பார்ஸிலோனா பெற்றுள்ளது. இதுவரை 29 போட்டிகளில் ஆடிய அந்த அணி, 20 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. அத்துடன் 5 போட்டிகளை சமநிலையிலும், 4 போட்டிகளை தோல்வியிலும் முடிவுறுத்தியுள்ளது. இதனால் 65 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. முதலிடம் வகிக்கும் அத்லெற்றிகோ மட்ரிட் அணி 66 புள்ளிகளுடனே முதல் இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.பி.எல். சம்பியன் பட்டத்தை டில்லி கைப்பற்ற முயல்வேன்!



புதுடில்லி, ஏப். 07

டில்லி கப்பிட்டல்ஸ் அணி முதன்முறையாக ஐ. பி. எல். கிண்ணத்தை வெல்வதற்கு முயற்சி செய்வேன் என்று அந்த அணியின் புதிய கப்டன் ரிஷப் பந்த் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடர் எதிர்வரும் மே 30ஆம் திகதி வரை சென்னை, மும்பை, கொல்கத்தா, அஹமதாபாத், டில்லி, பெங்களூர் ஆகிய ஆறு நகரங்களில் நடைபெறவுள்ளது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக, தொடக்க நிலை ஆட்டங்களில் ரசிகர்களுக்கு அனுமதி இல்லை. நாளை மறுதினம் சென்னையில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் மும்பையும் பெங்களூரும் மோதுகின்றன. அடுத்த நாள், மும்பையில் சென்னை - டில்லி அணிகள் மோதுகின்றன.

இந்நிலையில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் புதிய தலைவர் ரிஷப் பந்த் கூறுகையில்,

ஓர் அணித் தலைவராக என்னுடைய முதல் ஆட்டம், டோனிக்கு எதிராக அமைந்துள்ளது. அவரிடம் நான் நிறைய கற்றுக்கொண்டிருப்பதால் இந்த ஆட்டம் நல்ல அனுபவமாக இருக்கும். ஒரு வீரராக சொந்த அனுபவங் களும் என்னிடம் உள்ளன. எனவே, என்னுடைய அனுபவங்களையும் டோனியிடம் கற்றுகொண்டதையும் வைத்து சென்னை அணிக்கு எதிராக வித்தியாசமாக ஏதாவது முயற்சி செய்வேன். டில்லி அணி இதுவரை பட்டம் எதுவும் வெல்லவில்லை. எனவே, முதன்முறையாக பட்டம் வெல்ல முயற்சி செய்வேன்", என்றார். (ஐ)

# தென்னாபிரிக்க தொடர்: விலகினார் சதாப் கான்!

இஸ்லாமபாத், ஏப். 07

காயம் காரணமாக தென்னாபிரிக்க அணியுடனான மீதமுள்ள ஒருநாள் போட்டியிலும், இருபது - 20 தொடரில் இருந்தும் பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான சதாப் கான் விலகியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜொகன்னர்ஸ்பேர்க்கில் தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியில் சதாப் கான் துடுப்பெடுத்தாடிய போது கால் விரலில் காயமடைந்தார்.

இதனால், மீதமிருக்கும் ஒரு ஒருநாள் போட்டியிலும், 4 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரிலும் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தவிர, சிம்பாவே அணியுடனான தொடரிலும் அவர் பங்கேற்பது கடினம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் சதாப் கானுக்கு குறைந்தது நான்கு வாரங்கள் ஓய்வு தேவை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. (ஐ)



# பிரான்ஸ் ஒப்பன் ரென்னிஸ்: ஒத்தி வைக்கப்படுகின்றது?




பாரிஸ், ஏப். 07

பிரான்ஸில் கொரோனா தொற்று தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பிற்போடப்படலாம் என்று அந்த நாட்டின் விளையாட்டு அமைச்சர் ரொக்சானா மராசியானு கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் பொது முடக்கத்துக்கு சென்றது. இது வரும் மே மாதம் நடுப் பகுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரெஞ்சு ஓப்பன் வரும் மே 23 ஆரம்பமாகி ஜூன் 6 ஆம் நாள் வரை இடம்பெறவிருந்தது. இந்நிலையிலேயே இந்தத் தொடரை ஒத்தி வைக்க நேரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 2020ஆம் ஆண்டும் இந்தப் போட்டி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ)



# மீண்டும் வருகிறார் சாரா!

லண்டன், ஏப். 07

இங்கிலாந்து மகளிர் அணியின் முன்னாள் வீராங்கனையான சாரா ரெய்லர் மீண்டும் கிரிக்கெட் விளையாடவுள்ளார். 100 பந்துகள் கிரிக்கெட் மூலமே அவர் மீண்டும் வருகிறார்.

31 வயதான சாரா ரெய்லர், எக்காலத்திலும் சிறந்த வீராங்கனை என்று கொண்டாடப்படுபவர். 2006ஆம் ஆண்டு இங்கிலாந்து மகளிர் அணிக்காக அறிமுகமானார். 2019 வரை விளையாடிய அவர், 6,533 ஓட்டங்களை குவித்துள்ளார். அத்துடன் விக்கெட் காப்பாளராக இருந்து 232 ஆட்டமிழப்புகளை செய்துள்ளார்.

தவிர, இரு தடவைகள் ஒருநாள் உலகக் கிண்ணத்தையும், ஒரு தடவை இருபது - 20 உலகக் கிண்ணத்தையும் இங்கிலாந்து அணிக்காக வென்று கொடுத்துள்ளார். இந்நிலையில் பதட்டம் அதிகரிப்பு காரணமாக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

எனினும், அண்மையில் சஷெக்ஸ் ஆண்கள் அணியின் துணை பயிற்றுவிப்பாளராக இணைந்தார். இந்நிலையிலேயே இங்கிலாந்து கிரிக்கெட் சபை நடத்தும் 100 பந்து கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக அவர் மீண்டும் கிரிக்கெட் விளையாடவுள்ளார்.

100 பந்து கிரிக்கெட் தொடர் வரும் ஜூலை 21 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில், சஷெக்ஸ் அணியின் சார்பில் அவர் களமிறங்குவார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியசாலைகளில் 4,000 வைத்தியர் வெற்றிடம்

கொழும்பு, ஏப். 07

அரச வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான பற்றாக் குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாட ளாவிய ரீதியில் வைத்தியர்களுக் கான சுமார் 4,000 வெற்றிடங்கள் நிலவுவதாக அமைச்சு கூறியுள்ளது.

பல்கலைக்கழகங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் ஆயிரம் வைத்தியர்கள் வெளி யேறுவதாக சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம், டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர்களில் ஒரு பிரிவினர், தனியார் துறையில் பணியை தொடர்வதாகவும் மற்றுமொரு பிரிவினர் உயர்கல்வி நடவடிக் கைகளுக்காக வெளிநாடுகள் நோக்கிச் செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மரண அறிவித்தல்



## திரு.வேலாயுதன் சிவஞானசோதி

B.A(Econ) Hons, MSc(Bradford), U.K
FCMA (London), FCA (Sri Lanka), Chartered Accountant

(முன்னாள் செயலாளர் தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர் வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவர்)

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் 5.4.2021 அன்று மாலை சிவபதம் எய்தினார். இவர் காலம் சென்ற பிரபல சட்டதரணி திரு.வேலாயுதன் மற்றும் திருமதி.பொன்னம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனும், காலம்சென்ற திரு.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி. குமுதினி அவர்களின் அன்பு மருமகனும், குறமகளின் அன்புக் கணவரும், பிரபல சட்டதரணி திரு.தேவசேனாதிபதி மற்றும் தேசிய லொத்தர் சபையின் ஓய்வுபெற்ற பிரதி பொது முகாமையாளர் திரு. சுந்தரேஸ்வரன் அவர்களின் அன்பு சகோதரனும், கௌரி, சுமதி அவர்களின் மைத்துனரும், மயூரதன்-சிங்கப்பூர், சிவசங்கரன் -கனடா, சிவகாந்தன், வேல்விழிகனடா அவர்களின் மைத்துனரும் பிரதாப், துஷ்யந்தன், அவர்களின் சித்தப்பாவும் கோகுல், சுபஹரி, சிவராம், அருண்சிவா, அவர்களின் மாமாவும் பிரணவன், பைரவி அவர்களின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் புதன்கிழமை 9.00-6.00 மணிவரையும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை (Jayaratna VIP Palour வைக்கப்பட்டு) பிற்பகல் 1.00 மணியளவில் கிரிகைகள் ஆரம்பமாகி 4.00 மணியள வில் தகனம் செய்யப்படும். திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சுக்களில் - தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, சுற்றுலாதுறை அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் செயலாளராகவும் வடக்கு கிழக்கு அபிவிருத் திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வின் செயலாளராகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கத்த வராகவும் கடமையாற்றினார்.

**தகவல்:**

**குறமகள் (மனைவி) 077 900 7623**
**தேவசேனாதிபதி (சகோதரன்) 077 113 3400**
**சுந்தரேஸ்வரன் (சகோதரன்) 077 385 0841**

# இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல இதன் ஆதிக் குடிகள் தமிழ் மக்களே!

## ஜனாதிபதியின் கருத்துக் குறித்து விக்னேஸ்வரன் பதில்



**யாழ்ப்பாணம், ஏப்ரல் 07**

**இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல எனவும் ஆதிக் குடிகளாக தமிழர்களே இருந்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளதாகவும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் தெரிவித்துள்ளார்.**

இந்து சமுத்திர வல்லரசு களின் போட்டியில், சம்பந்தப் பட்ட தரப்புக்கள் அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பிரிவி னையைத் தூண்டப் பார்க்கின் றன என ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ கூறியுள்ளமை தொடர்பாக அவரிடம் எழுப் பட்ட கேள்விக்கு பதிலலிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

'ஜனாதிபதியின் தப்பான சிந்தனையின் வெளிப்பாடே இதுவாகும். ஏதோ, இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு, தமி ழர்கள் வந்தேறு குடிகள், எங்கி ருந்தோ வந்த அவர்கள் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக வசிப்பதால் தமக்கென நாட் டின் ஒரு பகுதியைத் துண்டா டப் பார்க்கின்றார்கள் என்பதே அவரின் கருத்து. ஆனால், உண்மை அதுவல்ல. இலங்கை நாடானது என்றுமே தமிழ்ப் பேசும் இடங்கள், சிங்களம் பேசும் இடங்கள் என்று பிரிந்து தான் இருந்துவருகின்றது.

'இந்த நாடு சிங்கள பௌத்த நாடல்ல. தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்லர். அவர்கள் இன்று நாட்டைத் துண்டாடக் கேட்க வில்லை. இலங்கையைத் துண் டாட வேண்டும் என்ற எண்ண மும் வல்லரசுகளுக்கு இல்லை. இதை கோட்டாபய ராஜபக்ஷ புரிந்துகொள்ள வேண்டும்.

'வெறுமனே, பௌத்த பிக்கு கள் சிலர் கூறும் தப்பான சரித் திரத்தை முன்வைத்து தப்பான முடிவுகளுக்கு அவர் வரக் கூடாது. முழு நாட்டுக்கும், சகல மக்களுக்கும் தான் ஜனாதிபதி என்று கூறியவர் எவ்வாறு சிங்கள பௌத்த சிந்தனையில் இருந்து கொண்டு நாட்டைப் பாரபட்சமின்றி நிர்வகிக்கப் போகின்றார் என்பது முக்கிய மான ஒரு கேள்வியாகும். அவரின் கூற்று தவறானது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் சைவம் தழைத் தோங்கிய இந்த நாட்டில் சில காலம் பௌத்தம் கோலோச்சி யது. பௌத்தம் வர முன்னரே இலங்கையை ஐந்து ஈஸ்வரங் கள் (இலிங்கங்கள்) காத்து வந்திருந்தன. கீரிமலை நகுலேஸ் வரம், மாந்தோட்டை திருக்கே தீஸ்வரம், சிலாபத்து முன்னேஸ் வரம், திருகோணமலை திருக் கோணேஸ்வரம், தேவேந்திர முனை தொண்டேஸ்வரம் என்ற ஐந்து இலிங்கங்கள் இலங்கைக் குக் காவல் அரண்களாக இருந்து வந்துள்ளன. ஆகவே தமிழ்ச் சைவ நாட்டில்த் தான் இன்று சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இலங் கையின் வடக்குக் கிழக்கில் இன்றும் சிங்கள பௌத்தர் அல்லாத தமிழ்ப் பேசும் மக் களே பெரும்பான்மையினர். எனவே முழுநாட்டையும் சிங் கள பௌத்த நாடு என்று அடையாளம் காட்டுவது மட மையின் உச்சக்கட்டம்.

முப்பது வருடகாலப் போரின் பின்னர் தமிழ்ப் பேசும் மக்கள் உலக நாடுகளின் கருத்தை அறிந்த பிறகு போர்க்கால குறிக் கோள்களை விட்டு இந் நாட் டில் தமிழ்ப் பேசும் மக்கள் எவ் வாறு நீதி, நியாயம், மதிப்பு, மரியாதை போன்றவற்றின் அடிப் படையில் ஒரே நாட்டுக்குள் தொடர்ந்து வாழ முடியும் என்ற கேள்விக்குப் பதில் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தற்போது நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை. ஒரே நாட்டில், நடைமுறையில் இருக்கும் வித்தியாசத்தை, வேற் றுமையை, தனித்துவத்தைப் பேணி பல் இனங்கள் ஒருமித் துப் பயணிக்க முடியுமா என்ற விடயத்தையே ஆராய்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர் கள் நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரே நாட்டினுள் இருக்கும் வேற்றுமைகளை அனுசரித்து எப்படிப் பல் இனங்கள் பயணிக்க முடியும் என்றே கேள்வி எழுப்பிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இலங்கையைக் கூட்டு சமஷ்டி நாடாக மாற்றுங்கள். இலங்கைத் தமிழர்கள், முஸ்லீம் கள், மலையகத் தமிழர்கள் யாவரையும் அணைத்து, அர வணைத்து அரசியல் செய்யுங் கள். அப்போது உலக நாடுக ளில் வாழும் அத்தனை தமிழர் களும் ஏன் முஸ்லீம் நாடுகளும் இலங்கையைப் பொருளாதார ரீதியாக வாழ வைப்பார்கள். வல்லரசுகளைக் குறை கூறாமல் ஜனாதிபதி தமது பிழைகளை எடைபோட்டுப் பார்த்து எம்முடன் சமாதானம் ஏற் படுத்த முன்வரட்டும். நாட்டில் சமாதானம் நிலைக்கும். சௌஜன் யம் உருவாகும். பொருளாதார ரீதியாக மறுமலர்ச்சி உண்டா கும்" என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# தீவிரவாதத்தைப் பரப்பிய நபர்களின் மடிக்கணனிகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஏப்.07

வெளிநாடுகளிலிருந்து இணையவழியூடாக தீவிரவா தத்தைப் பரப்பிய குற்றச்சாட் டின் பேரில் இலங்கை பொலி ஸாரால் கைது செய்யப்பட்ட சந் தேகநபர்கள் இருவரினதும் மடிக்கணனிகள் தொடர்பில் விரி வான விசாரணையை பொலி ஸார் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த மடிக்கணனியிலி ருந்து தீவிரவாதத்துடன் தொடர்புபட்ட புகைப்படங் கள் மற்றும் வீடியோக்கள் சில கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சா ளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேகநபர்கள் இரு வரும் ஐக்கிய அரபு இராச்சியத் திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# பண்டிகைக் காலப்பகுதியில் பயணக்கட்டுப்பாடு இல்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.07

எதிர்வரும் பண்டிகைக் காலப் பகுதியில் பயணக்கட்டுப்பாடு கள் விதிக்கப்படாது என்று இரா ணுவத் தளபதி ஜெனரல் சவேந் திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் கொழும்பிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு செல் வோரிடம் விரைவான அன்ரி ஜென் பரிசோதனைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

பண்டிகைக் காலங்களில் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் கொரோனா வைரஸ் தொற் றைத் தொடர்ந்து கட்டுப்படுத் துவதற்கான முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஆதரவளிப்பார் கள் என்ற நம்பிக்கையுள்ளது என் றும் அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பேராயர் மல்கம் ரஞ்சித் சிங்கள கிறிஸ்தவர்களின் ஆண்டகையா?

## பாராளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. கேள்வி



**கொழும்பு, ஏப்ரல் 07**

**இறுதி யுத்தத்தில் உயிரிழந்த தமிழ் மக்களுக்காக பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஏன் இதுவரையில் நீதியான விசாரணை ஒன்றைக் கோரவில்லை எனக் கேள்வி எழுப்பிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி . எஸ்.சிறிதரன், பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் சிங்கள கிறிஸ்தவர்களுக்கான ஒரு ஆண்டகையாகவே செயற்படுவதாகவும் இது தமிழ் மக்களை மிகவும் வேதனைப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான சட்ட மூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கீழ்தரமாக விமர்சித்திருந்தார். மதமொன்றின் தலைவராக இருந்துக்கொண்டு கர்தினல் உதிர்க்கும் வார்த்தைகள் பலர் புருவங்களை உயர்த்திப் பார்க்குமளவுக்கு உள்ளது.

'கர்தினல் சிங்கள கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே பேசுகின்றார். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்களில் தமிழ் கிறிஸ்தவர்களே அதிகளவில் உள்ளனர். அதேபோன்று இறுதி யுத்தத்திலும் பல கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். எனவே அனைவருக்காகவும் அவர் குரல் கொடுக்க வேண்டும். ஒரு மதத்தின் ஆண்டகையாக இருந்து கொண்டும் ஒரு இனத்துக்கு மட்டும் குரல் கொடுக்கக்கூடாது. இறுதி யுத்தத்தால் கொல்லப்பட்ட தமிழர்களுக்காகவும் கர்தினல் இதுவரையில் குரல் கொடுக்காமல் இருப்பது தமிழர்கள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நான் பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு எதிரானவன் அல்ல. ஆனால் அவர் ஒரு மதத்தின் தலைவராக இருந்துகொண்டு ஒரு இனத்துக்கு மட்டும் குரல் கொடுப்பது நியாயமல்ல என்றே கூறுகின்றேன்" என்றார்.

# எதிரணியினர் 10 பேரின் குடியுரிமையை நீக்க சதி!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



*கொழும்பு, ஏப். 07*

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசு சதி செய்வதாகத் குற்றம்சாட்டிய எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடாவும், ஐக்கிய மக்கள்சக்தி எம்.பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல, இதற்காகவே அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கூற்றொன்றை முன்வைக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதம் நாளையும் (08), நாளை மறுதினமும் (09) நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதனைக் காலந்தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசு சதி செய்கின்றது. இதற்காகவே அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.இதனைப் பயன்படுத்தியே இந்த கூட்டுச் சதி அரங்கேற்றப்படவுள்ளது என்றார்.

## ரஞ்சனுக்கு விடுமுறை வழங்க முடியாது

# பிரேரணை நிராகரிப்பையடுத்து பாராளுமன்றில் கடும் குழப்பம்

*கொழும்பு, ஏப். 07*

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுமுறை வழங்கக்கோரி பிரதான எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட விடுமுறை பிரேரணை சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, சபையில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது பிரதான நடவடிக்கைகளை தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து, சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் முறையிட நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

இருந்தபோதும் ரஞ்சன ராமநாயக்க பாராளுமன்றத்துக்கு வராமல் இருப்பது அவரது தனிப்பட்ட காரணத்துக்கு அல்ல. சபாநாயகரான நீங்கள் அதற்கான உத்தரவை வழங்காமல் இருந்ததனாலாகும். அதனால் 3 மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் இருப்பதை அடிப்படையாகக்கொண்டு, அவரது பாராளுமன்ற பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கின்றது. அதனால் அவரது 3 மாத விடுமுறை பிரேரணையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

அதற்கு சபாநாயகர் இதுதொடர்பில் கவனம் செலுத்துவதாகக் கூறி சபை நடவடிக்கையை தொடங்க முற்பட்டபோது, மீண்டும் எழுந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, அரசியலமைப்பின் பிரகாரம் 3 மாதத்துக்கு பாராளுமன்றத்துக்கு உறுப்பினர் ஒருவர் வராவிட்டால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல்போகின்றது. தற்போது ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் 3 மாதங்கள் முடிவடைய இருகின்றது. அதனால் 3 மாதங்கள் வராமை என்ற அடிப்படையில் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வெற்றிடமாக்காமல், இருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க உத்தரவிட வேண்டும். அதற்காக நீதிமன்ற உத்தரவு வரும்வரை ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான விடுமுறை பிரேரணையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றார்.

இதற்கு சபாநாயர, ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான நீதிமன்ற உத்தரவு இதுவரை எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவருக்கான விடுமுறை பிரேரணையை தற்போது என்னால் ஏற்கமுடியாது. எந்த உறுப்பினரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் என்னால் நீக்க முடியாது. சட்டத்தின் அடிப்படையிலே என்னால் செயல்பட முடியும் என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக ஏற்கனவே சபாநாயகரால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த தீர்ப்பில் எந்த மாற்றமும் இல்லை. அதனால் எதிர்க்கட்சிக்கு தேவையான முறையில் சபாநாயகரின் தீர்ப்பை மாற்ற முடியாது என்றார்.

இதனையடுத்து அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்




கடந்த மார்ச் 8ஆம் திகதி எமது குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்த நிலையில் நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் தங்கள் சிரமம் பாராது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், இறுதிக்கிரியைகளில் பங்கேற்றோர், தொலைபேசி ஊடாகவும் மற்றும் ஏனைய மார்க்கங்கள் ஊடாகவும் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் உறவினர், நண்பர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது குடும்பத்தலைவர் நோயினால் அல்லல்பட்டபோது யாழ். போதனா வைத்தியசாலை 10ஆம் விடுதியில் கடமையாற்றிய வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், சுகாதாரத்துறை பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களுடைய அன்பான சேவைக்கும் கவனிப்பிற்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகிறோம்.

09.04.2021 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வரியப்புலம் மகாமாரி அம்மனின், வரியப்புலம் பூந்தோட்ட ஞானவைரவரினதும் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

**காமாட்சி இல்லம்,**
**அம்பலவாணர் வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 224 0384**
**077 151 0554**


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ-பெண்கள் உளவியல்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : COFFE WITH பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓம் சக்தி / ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ். மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான மஞ்சத்திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு பட்டையார் அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
89.00 மணி : யாழ். மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான மஞ்சத்திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org